திராவிடநாடு

12—2—61 | வார வெளியீடு | விலை 16 காசு

# படியரிசி சொல்லும் குடியரசு

— தமிழ்க்கனல் —


—०ः ः०—

படியரிசி ஒருரூபாய் விற்கையிலே — வேகும்
பசிமிக்கோர் எங்கெங்கும் நிற்கையிலே
குடியரசுத் திருநாளும் வந்ததப்பா — இதுவரை
கொண்டுவந்து நமக்கென்ன தந்ததப்பா ?

வாக்குரிமை தந்ததப்பா வலதுகையில் — ஆனல்
பணங்காட்டிப் பறிப்பாரப்பா இடதுகையால் !
நாக்குரிமை தந்ததப்பா உலகின்முன்னே ! — ஆனல்
தடுப்புக்கா வல்இருக்கும் நமக்குமுன்னே !

சமஉரிமை வழங்குவதாய்ச் சொல்லுவார்கள் — ஆனல்
சத்தில்லா இந்திஇங்கே தள்ளுவார்கள் !
நமதுதோழன் வதையுறுவான் இலங்கையிலே — ஆனல்
நாவசையார் அவன்துடித்துக் கலங்கையிலே !

அடியரசாய்த் தில்லிக்கே கைகட்டி — நம்மவர்
அரித்தபணம் அவர்க்குத்தரு வார்கொட்டி !
குடியரசு வடக்கேயே தங்கிப்போச்சே ! — திராவிடக்
குலவாழ்வு உலகின்முன் மங்கிப்போச்சே !!



# உரிமை

[ கனகு ]

காலை வெயிலில் பளபளத்துக் கண்ணைப்பறித்துக்கொண்டு வருகிறது அந்தப் புத்தம் புதிய கார். மாளிகையின் வெளி வாயிலில் திரும்பி அதன் முகப்பில் வந்து அதோ நிற்கிறது. ஊர்தியிலிருந்து இறங்குகின்றார் இன்பநாதன். அதோ ஓடோடிச் செல்கிறான் சின்னான். ஊர்திக்குள்ளிருக்கும் பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு போய் உள்ளே வைக்கிறான். சாய்வு நாற்காலியொன்றில் 'தொப்' என்று போய் விழுகிறார்—அமர்கிறார் இன்பநாதன். கண்ணை மூடிக்கொண்டு பொய்யுறக்கம் போடுகின்றாரா, சிந்தனையில் ஆழ்ந்துகிடக்கின்றாரா? அதிகாலையிலே எழுந்து, ஊரெல்லாம் ஊர்தியிலே சுற்றி வந்த களைப்பா அவருக்கு? சின்னான் கதவோரமாக ஒற்றைக் காலில் நிற்கிறான், —நின்றுகொண்டிருக்கிறான் முதலாளியின் கட்டளையை எதிர்பார்த்து.

"அண்ணே" என்று சின்னானை விளித்தபடி அவ்வேளை பொன்னன் அங்கு வருகிறான்.

திடீரென்று இன்பநாதனின் கண்கள் திறந்துகொள்கின்றன.

"டே பொன்னா, காலையில் நான் எங்கே போய்விட்டு வருகிறேன் தெரியுமா?—உனக்கு எங்கே தெரியப்போகிறது! கொடியேற்றப்போயிருந்தேனடா, கொடியேற்ற! — இன்றைக்கு என்ன நாள் தெரியுமாடா?"

'தெரியும். இன்று வியாழக்கிழமை' என்று சொல்வதற்கு வாயெடுத்தான் பொன்னன். அதற்குள்—"போடா, முட்டாள்! அது கூடவா உனக்குத் தெரியும்! இன்று குடியரசு நாளடா, குடியரசு நாள்! இன்று யார் யார் வருவார்கள் தெரியுமா நம் வீட்டிற்கு? — அதெல்லாம் நீ எங்கேடா தெரிந்துகொள்ளப் போகிறாய்! இன்று பகல் நம் வீட்டில் விருந்தடா முட்டாள்!—அது தெரியும் உனக்கு, இல்லையா? ஏனென்றால் சாப்பாடு பார்! விருந்துக்கு யார் யார் வருவார்கள் தெரியுமா? மாநில முதலமைச்சர் வருவார். மாவட்டத் தண்டல் நாயகம் வருவார். இன்னும் மற்ற மற்றப், பெரிய பெரிய அதிகாரிகள் எல்லாம் வருவார்கள். இன்னும், நம் தொகுதி எம். எல். ஏ. பேராசைநாதன் இருக்கிறார் பார், அவர்தான் பாழூர் பஞ்சாலை உரிமையாளர்—அவர்கூட வருகிறார்."

பேராசைநாதனின் பெயரைக் கேட்டதும் சட்டென்று பொன்னனின் முகம் கறுத்துச் சிறுத்தது. உள்ளத்தை எப்போதும் அழுத்திக்கொண்டிருக்கும் ஒரு பாரம், பெரும் பாரம் இப்போது புதுக் கனத்தோடு மேலும் அழுத்தியது அவனை. அத்தனை ஆற்றல் அந்தப் பெயருக்கு. பேராசைநாதனைப் பொன்னன் நன்றாக அறிவான். நினைவு வந்த காலந்தொட்டு காளைப்பருவம் வந்தடைந்த பின்வரை, இந்த இன்பநாதனிடம் தொழும்பு செய்யவருவதற்கு முன்வரை, அந்தப் பேராசைநாதனிடத்தில்தானே பொன்னன் கொத்தடிமைத் தொழில்புரிந்து குடலை நிரப்பிக்கொண்டு வந்தான்.

அந்தக் கொத்தடிமைத்தனத்துக்கு முற்பட்ட நாட்களைப்பற்றி பொன்னனின் எண்ணம் சற்றே பின் சென்றது. அவன் பெற்றோர் உயிரோடிருந்த நாட்கள் அவை. அவனுடைய குழந்தைப் பருவம் அது. அப்போது அவர்கள், காடு, கழனியோடு வாழ்ந்து வந்தார்கள். அவர்களின் உழைப்பைக் கண்டு மகிழ்ந்துபோன இயற்கைத் தாய் அவர்கள்மாட்டு வாரி வழங்கிய பலனை — இடையில் நிற்கும் எவன்கைக்கும் செல்லவிடாமல், உடையவர்கள் நாங்கள் என்றபெருமிதத்தோடு அவர்கள் ஆண்டு, அனுபவித்து வந்த காலம் அது. அப்போது அவர்களுக்குப் பெரிய வீடு இருந்தது. அந்தப் பெரிய வீட்டிலே வரிசை வரிசையாகச் செந்நெற் களஞ்சியங்கள் இருந்தன. அந்தக் களஞ்சியங்கள் நெல்மணியால் நிறைந்து கிடந்தன. இன்னும் வேறு வேறு நல்ல பல பொருள்கள் அங்கே குவிந்து, நிரம்பி, மிஞ்சிக் கிடந்தன. அந்த வீட்டை அடுத்துத் தோட்டம் ஒன்று. அந்தத் தோட்டத்திலே வேண்டும் வகையில், வேண்டும் அளவில் செடி வகைகள் செழித்து வளர்ந்திருந்தன; கொடி வகைகள் பின்னிப் படர்ந்து, பரவிக் கிடந்தன; மர வகைகள் ஓங்கி உயர்ந்து நின்றன. அவற்றில் எல்லாம் பூவும், பிஞ்சும் மண்டிக் கிடந்தன. காயும், கனியும் செறிந்திருந்தன. அவை எழில் பரப்பின; மணம் ஊட்டின. அவை எல்லாம் அந்நாள் பொன்னனுக்கும், அவன் பெற்றோர்க்கும் சொந்தமாக இருந்தன. அவற்றை எல்லாம் அவர்கள் தங்கள் விருப்பம்போல் ஆண்டு வந்தார்கள்; அனுபவித்து வந்தார்கள். இரந்து வருவார்க்கு— அப்படி வருவாரும் அந்நாள் மிகமிக அருமை — இல்லை என்னாது வழங்கி வந்தார்கள். அதன் வழி இன்ப வாழ்வு, நல் வாழ்வு, உரிமை வாழ்வு, பெருமித வாழ்வு வாழ்ந்தார்கள் அவர்கள்.

திடீரென்று ஒரு நாள் அந்த ஊரின்மீது கொள்ளை நோய் படை எடுத்து வந்தது. அங்குள்ளோரின் உயிரை எல்லாம் அது பறித்துக் கொண்டு போகும் ஆவலிலே, வேட்கையிலே வந்தது. பெரும்பான்மை வெற்றியும் கண்டது. ஊர் அறியாதவன் பொன்னன்; உலகம் அறி

( 4-ம் பக்கம் பார்க்க )

முயற்சி திருவினையாக்கும்

19] ஆண்டு சந்தா ரூ. 8 (12—2—61) தனிப்பிரதி 16 காசு [இதழ் 26, 27, 28, 29

நாட்டு வரலாறுகளை நல்ல முறையில் படித்தவர்—வகையோடு படித்தவர்—வரையறுத்துப் படித்தவர்.

மொழியை எடுத்துக்கொண்டாலோ, உலகம் முழுவதிலுமுள்ள மொழிகளை எல்லாம் முற்றும் கற்று, முழுதுணர்ந்த மூதறிஞர்.

நாடு என்றால் என்ன? மொழியை வைத்து நாடா? நாட்டைவைத்து மொழியா? நாடுங்கள் அவரை, நல்ல விளக்கம் தருவார்.

பழைய நூல்களைப் பிழையறவும் பழுதறவும் படித்தவர். பாரினில் அவருக்கு நிகர் யாருமில்லை.

என்று சொல்லத்தக்க வகையில் திறனனைத்தையும் ஒருங்கே பெற்று, எதற்கும் எந்த நேரத்திலும், சரியான பதில் தந்து, கேட்டவர் வாயடைத்துத் திகைத்துத் திணறிப்போகுமளவுக்குச் சுடச்சுடச் சொல்லம்பைவீசி வெற்றி பெறத்தக்கவர் ஒருவர் இருக்கிறார் என்றால், அவர்தான் நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் காமராசர் அவர்கள் என்று கூறலாம்.

ஏனென்றால், ஒன்றும் அறியாதவரையோ, ஒன்றறிந்துபலதறியாதவரையோநாம், நம்நாட்டின் முதல்வர் என்று ஒப்புக்கொள்ள முடியாதல்லவா! எனவேதான், எல்லாம் அறிந்தவர் என்ற முழு உரிமையோடும் முதலமைச்சர் என்ற முறுக்கோடும் எதிலும் தலையிட்டு' எதற்கும், அஞ்சாது, "ஓ! இதுவா? இதோவிளக்கம்' என்று பேசமுடிகிறது.

> "தமிழ்நாடு" பெயர் மாற்றமா? இது முடிகிற காரியமா? இதற்கு ஆதாரம் ஏது? நான் பழைய நூல்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் அலசி அலசி ஆராய்ந்திருக்கிறேன். அவைதம்மில் ஒன்றில்கூடத் "தமிழ்நாடு" என்ற சொற்றொடரே காணப்படவில்லையே!
>
> சேரன் இருந்தான்
>
> சோழன் இருந்தான்
>
> பாண்டியன் இருந்தான்
>
> இவர்கள் மூவரும் தமிழ்மொழியின்பால் பரிவு காட்டி அதனை ஆதரித்து வளர்த்தார்கள் என்றுதான் பழைய நூல்களில் காணப்படுகிறதே தவிரத், "தமிழ்நாடு" என்று ஒன்று இருந்ததாகவே காணப்படவில்லையே"

என்று ஏகப்பட்ட ஆதாரங்களைக் குவித்து வைத்துக் கொண்டு பேசும் வரலாற்று ஆசிரியர் பேசியுள்ளார்.

இப்படிப் பேசும்போது, தாம் யார்? எப்படிப்பட்ட பொறுப்பில் இருப்பவர்? என்பனவற்றை எல்லாம் மறந்துவிட்டாரே என்பதை எண்ணும்போது உள்ளபடியே நமக்கெல்லாம்—அவரை நாட்டின் முதல்வராகப் பெற்றுள்ள நாட்டு மக்களுக்கெல்லாம் வேதனையாகத்தான் இருக்கிறது.

"தமிழ் நாடு" என்ற பெயர் பழைய நூல்களில் இருக்கிறதா இல்லையா என்பதை அறிந்து கூறும் பொறுப்பும் தகுதியும் உள்ளவர் பலர் இருக்க, "இந்தத் தொகுதிக்கு இவரைப் பிடித்து நிறுத்தினால் இவ்வளவு ஓட்டு வரும்" என்ற புள்ளிவிபரக் கணக்காராய்ச்சியிலேயே காலம்முழுவதையும் செலவிடும் கனம் காமராசர் அவர்கள் "தமிழ் நாடு" பற்றிய இலக்கணம்கூற முன் வந்திருப்பது உண்மையிலேயே உள்ளத்தை நோகச் செய்கிறது.

வேண்டுமானால், இவர்காலத்தில் இருந்த பாரதியார் "தமிழ் நாடு" என்று கூறினர், இந்நாட்டுக் காங்கிரசைத் "தமிழ் நாடு காங்கிரஸ்" என்றுஅழைத்தோம் என்று கூறுவதோடு நின்றுவிடட்டும். கவலை இல்லை நமக்கு.

ஆனால், இருப்பதை இல்லையென்றும், தெரியாததைத் தெரிந்தது போன்றும் பேசுவது ஒரு பொறுப்பில் இருக்கும் முதலமைச்சர் போன்றவர்கட்கு உகந்ததல்ல என்பதைத் தவிர வேறென்ன கூறமுடியும்?

"தமிழ்நாடு" பழைய நூல்களில் இல்லை என்று கூறும் கனமவர்கள், "சென்னை" என்ற சொல் பழைய நூல்களில் இருக்கிறது, ஆகையால் சென்னையைத் தமிழ்நாடு என்று மாற்றுவது மதியுடைமையுமல்ல, தேவையுமல்ல என்றுவது கூறவேண்டும்.

இந்தியா என்று இப்போது அழைக்கிறார்களே—இந்தத் துணைக்கண்டத்தை. இந்த இந்தியாவாவது பழைய நூல்களில் இருக்கிறதா? அதெல்லாம் போகட்டும். இப்போது இந்நாட்டின் பொதுமொழி "இந்தி" என்கிறார்களே!

இது எவ்வளவு காலமாக இருந்துவருகிறது? மொழி நூல் ஆராய்ச்சியில் எத்தனையாவது இடத்தில் நிற்கிறது?

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்குள், பட்டாள மொழி ஒன்று தேவை என்பதற்காகப் பல மொழிகளில் உள்ள சொற்களின் தொகுப்புத்தானே இந்த இந்தி.

இது நாட்டின், பொதுமொழி என்ற நிலை பெறும் தகுதியைக் கற்பிக்கும்போது, காலத்தால் முந்திய "தமிழ்நாடு" என்ற சொல் பழைய நூல்களில் காணப் படவில்லை என்று கூறச் சிலர் இன்னும் இருக்கிறார்கள் என்றால், அவர்தம் போக்கை என்னென்பது! பாரத நாட்டைக் கண்டவர்கள் வழி நிற்பதே தமக்கெல்லாம் பெருமையும் புகழும் என்ற முடிவில் இருப்பவர்களிடம்போய், "தமிழ் நாடு" என்று பெயர் வையுங்கள் என்றால், பாரதமாதா கண்கலங்கிக் கசிந்துருக மாட்டார்களா? பாவம், அவர்களிடம் போய்க் கேட்பானேன்? அதனைப் பெறும் வழியில் சென்று—தொடர்ந்து பணியாற்றினால், தமிழ் நாடு தானாகவே அமைந்துவிடப் போகிறது.

இந்த முயற்சி ஒருக்கால் காலம் கடந்து கிடைக்கும் பலனாக வேண்டுமானால் இருக்குமே யொழியக், காலங் கடத்தித் தட்டிக் கழிக்கும் போக்கில் தம்மை ஆளாக்கிக்கொண்டுள்ள அமைச்சர்களிடம் முறையிடுவதை விட, அவர்களை அமைச்சர்களாக்கிய பொதுமக்கள் முன்னிலையில், மன்றங்கள் பல கூட்டித் தமிழ் நாடு பெயர் மாற்றப் பிரச்சினையை வைப்போமானால், மிக எளிதாக வெற்றிபெற முடியும். இதனைச் செய்து முடிக்கக் கட்சி வேறுபாடு கருதாத தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுசேர முயற்சி எடுத்துக்கொள்வோமாக.

★

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

யாத சிறியவன் அவன். பொருது வந்த கொள்ளை நோய்க்குப் புறங் காட்டாது எதிர்த்து நின்றான் பொன்னன். "என்னையா எதிர்த்து நிற்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்! உன் பெற்றோரையும், உன் உற்றார் உறவினர் அனைவரையும் கவர்ந்துகொண்டு போகிறேன் பார்! உன் நல் வாழ்வு அவ்வளவையும் பறித்துக்கொண்டு போகிறேன் பார்! உன் இறுமாப்பை அடக்கிவிடுகிறேன் பார்! உன்னை ஓரியாக்கி, ஒண்டியாக்கி, நடுத்தெருவில் தவிக்க விடுகிறேன் பார்!" என்று கூறுமற் கூறிப் பொன்னனைத் தவிர மற்று அனைவரையும் கவர்ந்துகொண்டு, அதன் மூலம் எல்லாவற்றையும் அவனிடமிருந்து பறித்துக்கொண்டு போய்விட்டது அந்தக் கொள்ளை நோய்.

அந்தக் கொள்ளை நோய் வெற்றி வாகை சூடிக்கொண்டு அங்கிருந்து கிளம்பிச் சென்ற பின்னர், பேரச்சம் நிரம்பிய அவலத் தன்மையின் ஆழ்ந்து படிந்த அடிச்சுவட்டை மட்டும் அங்கு விட்டுச் சென்ற பின்னர், இனி அந்தக் கொள்ளை நோய் புரிய வேண்டிய இடர் ஒன்றும் அங்கு இல்லை என்ற நிலைமையை நன்கறிந்துகொண்டு, அங்கே வருகை தந்தார் பேராசைநாதன். நேரே இந்தச் சின்னஞ்சிறிய பொன்னனிடம் — அந்தப் பெத்தம் பெரிய வீட்டுக்கு வந்தார்.

"போயிற்றே, போயினவே!" என்று அவர் வாய் அலறியது. "கிட்டிற்றே, கிட்டினவே! பெருநிதியம் கிட்டியதே" என்று அவர் உள்ளம் அவரிடம் மறைவாகச் சொல்லியது.

ஊரிலே எஞ்சி நின்ற சிலர், கொள்ளை நோயின் படை எடுப்புக்கு முன் வேறெங்கோ ஓடிப்போய் விட்டுத் திரும்பி வந்திருந்த சிலர், அங்கே பேராசைநாதனைச் சூழ்ந்து நின்றனர்.

"உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ — இந்த வீட்டுத் தலைவர், இந்தச் சிறுவன் பொன்னனின் தந்தை என்னோடு நீண்டநாள் நட்புக் கொண்டிருந்தவர். எங்கள் இருவர்க்குமிடையே கொடுக்கல், வாங்கல் மிக மிக உண்டு. அவர் முடைப்பட்ட வேளை எல்லாம் என்னிடம் தான் ஓடி வருவார். அவ்வகையில் அவர் என்னிடம் கடன் பெற்றுள்ள தொகையும் கணிசமானது. இதோ பத்திரம் உள்ளது. ஐயங்கொண்டோர் பார்த்துக்கொள்ளுங்கள்! — என்ன, பார்த்துக்கொள்கிறீர்களா?"

சுற்றி நின்றோரைப் பார்த்துக் கேட்டார் பேராசைநாதன்.

"இல்லை, இல்லை! நீங்கள் வந்து பொய்யா சொல்லப்போகிறீர்கள்! ஊருக்கு நீங்கள் பெரியவர். நல்லது சொல்பவர்; செய்பவர். நாலு பேர்க்கு அறிமுகமானவர். எல்லார்க்கும் பொதுவானவர்" என்று கும்பல் ஒரே ஒலியாகக் குரல் கொடுத்தது.

"எனக்குத் தரவேண்டிய கடன் கிடக்கிறது! அதைப்பற்றி அக்கறையே கிடையாது. அருமை நண்பரைவிடவா பணம் பெரிது?..... ஆனால், இந்தப் பையன் இப்போது தனிமையாக நிற்கிறான். இவனைக் காப்பாற்றவேண்டும். இவனுடைய சொத்துச் சுதந்திரங்களை எல்லாம் போற்றி வைத்திருந்து, பின் நாளில் இவனிடம் ஒப்படைக்கவேண்டும். என்ன சொல்கிறீர்கள் நீங்கள் எல்லாம்? இப்போது இந்தச் சிறுவனைப் பாதுகாக்கும் பொறுப்பை உங்களில் யாரேனும் ஏற்றுக்கொள்கிறீர்களா?"

"இல்லை, இல்லை. அவ்வளவு ஆற்றல் எங்களிடம் இல்லை. அந்த நல்ல பணியை நீங்கள்தான் செய்யவேண்டும்"

கும்பல் திரும்பவும் ஒருமுகமாகக் குரல் கொடுத்தது.

"சரி, அப்படியானால் சரி! பையனை நானே அழைத்துச்செல்கிறேன்."

கிளம்பினார் பேராசைநாதன்.

"பெரிய மனம் இவருக்கு! மிகமிக நல்லவர் இவர்! இரக்க சிந்தனை நிரம்பப்பெற்றவர்!" என்று பாராட்டியது அந்த விழியிழந்த கும்பல்.

"நல்ல வாய்ப்பு; அருமையான சமயம். இனி இவர்களின் காடும், கழனியும், தோட்டமும், துரவும் எனக்கே சொந்தம், எனக்கே சொந்தம்" என்று செம்மாந்து, இறுமாந்து சென்றார் பேராசைநாதன். பொன்னன் — அந்தச் சிறுவன் அவரைப் பின்தொடர்ந்து சென்றான்.

சில நாட்கள் பொன்னன் சும்மா இருந்தான். பிறகு எருமை மேய்க்க

(13-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

12 2–'61.

தம்பி!

தமிழர் திருநாளில் மலர் அளித்து மகிழ்ந்த பிறகு, ஒரு திங்களுக்கு மேலாகவே மடல் அனுப்பி அளவளாவும் வாய்ப்பு இலாது போயிற்று. இடையே உருண்டோடிய நாட்களும், உருவெடுத்த நிகழ்ச்சிகளும் பல—அளவில், வகையில். எதிர்பாராதவை, ஏக்கமளிக்கத்தக்கவை, அச்சமூட்டுபவை, ஆயாசம் தருவன எனும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள்; கழகத்தோடு பிணைந்துகொண்டவைகளை மட்டுமல்ல, நான் குறிப்பிடுவது; நாட்டிலே; அரசியல் வட்டாரங்களிலே; அங்காடிகளிலே; அறமன்றங்களிலே; அமைச்சர் முகாம்களிலே; உலகிலே.

அமெரிக்காவுக்குப் புதிய தலைவர் வந்துள்ளார்—அரசோச்ச.

அவருக்கும், அமெரிக்காவிடம் இலட்சியம், நடைமுறைத் திட்டம் ஆகியவை காரணமாக, முரண்பட்டுக்கிடக்கும் சோவியத்தின் தலைவருக்கும், நேசமும் பாசமும் வளருமா, என்பது பற்றிய கவலை ஒருபுறம்.

மேற்கத்தி நாடுகளின் கூட்டணிக்கும், அமெரிக்கத் தலைவர் கென்னடிக்கும், தொடர்பிலே, மாற்றம் ஏதேனும் ஏற்படுமா என்ற ஐயப்பாடு மற்றோர்புறம்.

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவுக்குச் செல்வாக்குச் சிதைவதாகத் தென்பட்டபடி இருப்பதை, கென்னடி கண்டறிந்து, என்ன வழியினைக் கையாண்டு, செல்வாக்கு வளரச் செய்வார் எனும் கேள்வி.

உலக மன்றத்தின் கண்டனக் குரல் பற்றியும் கவலையோ அச்சமோ காட்டாமல், நிறவெறியாட்டத்தில் ஈடுபட்டுக்கிடக்கும் தென் ஆப்பிரிக்காவின் போக்குப்பற்றியதால் எழுந்துள்ள கவலை.

இரத்தக் காடு என்று கூறத்தக்க நிலையில், அல்ஜீரியாவும், காங்கோவும் அல்லற்பட்டுக் கிடப்பதனால் ஏற்படும் அச்சம்.

இவையும், இவைபோன்ற வேறுபல பிரச்சினைகளும், மனதை மருட்டத்தக்க வகையில், வடிவமெடுத்துவிட்டன.

க்யூபா நாட்டிலே புரட்சிப் புயல்! அபிசீனிய நாட்டிலே மன்னருக்கு எதிராகச் சதி! போர்ச்சுகலில் சலாசர் ஆதிக்கத்தை அழித்தொழிக்க, புரட்சிப்படை தயாராகி வரும் நிலைமை! லாவோசில் உள்நாட்டு அமளி!—இவ்வண்ணம் பல பிரச்சினைகள்—பயமூட்டத்தக்க விதத்தில்.

எல்லையைப் பறிகொடுத்துவிட்டதால் ஏக்கமும், திகைப்பும் 'கொண்டு,' இந்திய துரைத்தனம் இருக்கும் நிலைமை.

# கண்ணொளி போதும்....

பர்மா, பூடான், சிக்கீம், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன், சீனு, விருந்து வைபவம், கூட்டறிக்கை, கொள்கை விளக்கம், ஒப்பந்தம் போன்ற முறைகள் மூலம், புதிய நேசத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் போக்கு.

தம்பி! தமிழகத்தில், நான் மேலே கோடிட்டுக் காட்டிய நிகழ்ச்சிகள், நெருக்கடிகள், பிரச்சினைகள் பற்றி அல்ல, அக்கரையோடும், பரபரப்பு உணர்ச்சியோடும் பேசத் தலைப்பட்டது.

பேரரசி எலிசபத் பவனி வருகிருர், பால்வண்ண நிலவொளியில், காதல் வண்ணத்தையும், மொகலாய சாம்ராஜ்யச் சிறப்பினையும் எடுத்துக்காட்டி இசைபாடி நிற்கும் எழிலுருவமாம் 'தாஜ்மகாலை'க் கண்டு வியந்தார்; பாராட்டுரை வழங்கினர். பேரரசியின் கணவர் முதலையைக் குறிபார்த்துச் சுட்டுத் தள்ளினுர், — புலியினைக் கொன்ருர், ஏராளமான வாத்துகளையும் சுட்டு வீழ்த்தினுர்; போலோ விளையாட்டில் ஈடுபட்டார்.

சிற்றரசர்களும், சீமான்களும், சீமாட்டிகளும் ஆட்சியாளர்களும், பேரரசியாருக்கு விருந்தளித்து மகிழ்ந்தனர்.

இவைபற்றி அல்ல, தமிழகம், ஆர்வம் பொங்கும் நிலையில் பேசிக்கொண்டிருந்தது.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், தென்னகம் வஞ்சிக்கப்படுவது அறிந்து, மனக்குமுறல் ஏற்பட்டது.

கடன்மேல் கடன் வாங்கிக் கவைக்கு உதவாத காரியங்களிலே ஈடுபடுகின்றனரே, காங்கிரஸ் ஆட்சியினர் என்பது குறித்த கவலை கிளம்பி மக்கள் மனதை வாட்டிற்று.

புதிது புதிதாக, என்னென்ன வரிகளைப் போட்டு, ஏழையர் வாழ்வை மேலும் வதைக்கப் போகிருர்களோ— பிப்ரவரித் திங்கள் பெட்டி நிரப்பும் காலமாயிற்றே-என் பதுபற்றிய அச்சம் உள்ளத்தில் குடையும் நிலைமை.

விலைவாசி ஏறித்தான் இருக்கிறது! குறைக்க முடியவில்லை என்று அமைச்சரே அறிவிக்கும் அவல நிலை கண்டு, மக்கள் திகைப்படைந்துள்ளனர்.

எனினும் தம்பி! இரண்டு மூன்று கிழமைகளாக, தமிழகம் இவைபற்றி அல்ல, பேசிக்கொண்டிருந்தது.

வைரவிழா நடாத்தினர் காங்கிரசார் — குடிஅரசு நாளைக் கோலாகலமாகக் கொண்டாடினர்—ஆனல், தமிழக மக்கள், இவைபற்றி ஆர்வத்துடன் பேசினுர் இல்லை!!

உலகப் பிரச்சினைகளிலிருந்து உள்ளூர் அரசியல் பிரச்சினை வரையில், அக்கரையுடன் பேசினுரில்லை.

பஞ்சாபில் அறப்போர் நிறுத்தப்பட்டது. அப்படியா? என்று ஆச்சரியத்துடனே, இனி என்ன நடக்கும்? என்று அக்கரையுடனே, தமிழக மக்கள் கேட்கவில்லை.

தனிநாடு கேட்டுப் போரிடும் நாகர்களிடையே, பிளவு உண்டாக்கிடும் நோக்குடன், அவர்களிடையே, சிலரைச் சரிப்படுத்திக்கொண்டு, போலித் திட்டம் ஒன்றினைப் புகுத்த, இந்திய சர்க்கார் முனைந்துள்ளனர். இது வெற்றி பெறுமா? நாக நாட்டு விடுதலை வீரனும், பிசோ இனி என்ன செய்வார்? என்று கேட்கவில்லை; தமிழகத்தில் அதுகுறித்த உரையாடலைக் காணும்.

நாய்க்குட்டிகளையும், குரங்குகளையும், வான வெளிக்கு அனுப்பி வெற்றி கண்ட, ரஷிய விஞ்ஞானிகள், இப்போது மனிதனையே அனுப்பியுள்ளார்கள் என்று செய்தி வருகிறது. அது உண்மையா, வெற்றுரையா, என்பதுபற்றிப் பேச்சு எழக் காணும்.

தமிழகத்தில், இரண்டு மூன்று கிழமைகளாக, வானவெளிப் பயணமாயினும், விலைவாசி ஏற்றமாயினும், இவை பேசப்படவேண்டிய பிரச்சினைகள் என்று எண்ணியதாகத் தெரியவில்லை; ஒரே ஒரு பிரச்சினைதான், மனைகளில் மன்றங்களில் உரையாடல்களில் சொற்பொழிவுகளில், பேசப்பட்டது. அமைச்சர்கள் இது குறித்தே பேசினர்—ஆள் பிடிப்போருக்கும் இதுவே பேச்சு! கலங்கிப் பேசினர், கண்ணீர் வடித்துக் கொண்டும் கைபிசைந்துகொண்டும் பேசினர்! கடை வீதியில் இதுதான் பேச்சு—கல்லூரிகளிலும் இஃதே தான்!!

கண் சிமிட்டிப் பேசினர் சிலர்; முக்காலமும் உணர்ந்தோர் போலப் பேசினர் சிலர். கெக்கலி செய்து பேசினர் சிலர்; ஆயாசம் தீர்ந்தது என்ற நிலையில் பேசினர் சிலர்.

எனக்கு முன்பே தெரியும் என்று ஆரூடம் அறிந்தோர்போல் பேசினர் சிலர்; வேறு எப்படி நடக்கும் என்று அலட்சியத்தையும் வெறுப்பையும் அள்ளி வீசினர் சிலர்; அடேயப்பா! என்னென்ன ஆட்டங்கள்! எத்துணை இறுமாப்பு இதுகளுக்கு! என்று ஏளனம் பேசி, ஏற்கனவே ஏற்பட்டிருந்த அச்சத்தைப் போக்கிக் கொள்ள முயற்சித்தனர் சிலர்.

என்னென்னமோ எண்ணிக்கொண்டிருந்தோமே! இப்படி இருக்கிறதே நிலைமை!!—என்று வாட்டத்துடன் பேசினர் சிலர்.

ஏன் இப்படி நேரிட்டது? என்று காரணம் காண விரும்பிப் பேசினர் சிலர்; எப்படியாவது, விரும்பத்தகாத இந்த நிலைமையை, மாற்றியாகவேண்டும் என்ற உள்ளன்புடனும் உறுதியுடனும், பேசினர் சிலர்.

உணர்ச்சி வயப்படக்கூடிய வயதினர் ஒரு காரியத்தில் ஈடுபட்டால் இப்படித்தான் நேரிடும் என்று கவலையைத் தெரிவித்துக்கொண்டனர் சிலர். இது நாட்டுக்கும் நல்லதல்லவே என்று நல்லுரை கூறினுர் சிலர்.

ஒரே ஒரு பிரச்சினைதான், பேசப்படத்தக்கதாகத் தமிழகத்துக்குத் தோன்றிற்று. ஒரே ஒரு பிரச்சினை பற்றித்தான், கொந்தளிப்பும் கோபதாபமும், காரசாரமும் கொண்ட முறையில் பேசிக்கொள்ளப்பட்டது.

தம்பி! அந்த ஒரே ஒரு பிரச்சினை — பலருடைய உள்ளத்தைக் குலுக்கிய பிரச்சினை — அகில உலகத் தொடர்புகொண்ட பிரச்சினைகளையெல்லாம் மூலையில் தள்ளிவிட்டு, முன்னணி நின்ற பிரச்சினை, யாது? நம்முடைய பிரச்சினைதான்!!

தி. மு. கழகத்திலே நெருக்கடி — நேசத் தொடர்புகளிலே முறிவுகள் — பாசத்தைப் பிய்த்தெரியத்தக்க பிளவுகள்—குழப்பம்—தலைவர்கள் திக்காலொருவர் ஓடிவிட்டனர் — என்பதுதான், தமிழகத்திலே, பத்துப் பதினைந்து நாட்களாகப் பரபரப்பூட்டிய பேச்சு.

நல்ல வேட்டை நிருபர்களுக்கு! பத்திரிகைகளுக்குக் கொண்டாட்டம்! காங்கிரஸ் பேச்சாளர்களுக்கு, ஏகப்பட்ட கிராக்கி!

ஆந்திர மாநிலக் காங்கிரசிலே, அமளி மூண்டிடத்தக்க நிலைமை.

மைசூர் மாநிலக் காங்கிரசிலே, மருட்சிகொண்டிட வைக்கும், மனமாச்சரியம்.

உத்தரப்பிரதேசக் காங்கிரசில், உள்ளத்தைக் குலுங்கச்செய்யும்விதமான, பிளவுகள், பேயாட்டங்கள்.

பஞ்சாப் மாநிலத்தில் கிளர்ச்சிக் கோலத்தில் காங்கிரஸ் கட்சியினர்.

கேரளத்தில், காங்கிரஸ் — பிரஜா சோஷியலிஸ்ட் கூட்டுக்கு வேட்டு வைக்கும் போக்கிலே, காங்கிரஸ் வட்டாரத்திலே நடவடிக்கைகள்.

வெளியே வேற்றுமைகளைப்பற்றிப் பேசாதீர்கள் என்று காங்கிரஸ் தலைவர் கூறிக் கட்டுப்படுத்த வேண்டியவிதமான, கலகநிலைமை, காங்கிரஸ் முகாமில்.

இவைகளைப்பற்றிப் பொதுமக்கள்கூட, அதிகக் கவனம் செலுத்திப் பேசவில்லை; இதனால் எல்லாம் என்ன ஆகுமோ என்று அச்சப்படவுமில்லை, ஆயாசப் படவுமில்லை. ஆனால், தி. மு. கழகத்திலே பிளவு — நெருக்கடி — குழப்பம் — என்று தெரிவிக்கப்பட்டதும், உள்ளபடி, கவலையுடன், கலக்கத்துடன், அன்பு கலந்த அக்கரையுடன் பேசிக்கொண்டனர்.

தம்பி! ஏற்பட்ட நிலைமையின் தன்மையை மறைக்க இவ்விதம் கூறுகிறேன், என்று எண்ணிக் கொள்ளாதே. நிலைமையின் தன்மையை நான் குறைத்தும் மதிப்பிடவில்லை; மூடி மறைத்துவிடக்கூட விரும்பவில்லை; ஆனால், அந்த நிலைமைபற்றி, நாடே கவனித்துக் கொண்டிருந்ததே, பேசிக்கொண்டிருந்ததே, அது எதைக் காட்டுகிறது என்பதை எண்ணிப்பார்த்தால், நாம் ஒவ்வொருவரும் பெருமைப்படத்தக்க ஓர் பேருண்மை விளங்கும்.

நமது கழகம், அந்த அளவுக்கு, மக்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கிறது.

கழகத்தின் ஒவ்வொரு சிறு அசைவுகளும், கழகத்தாரின், ஒவ்வொரு நடவடிக்கையும், பொதுமக்களால் மிக மிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டுவருகின்றன.

கழகத்திலே காணப்படும், ஏற்படும், ஏற்படுத்தப்படும், ஒவ்வொரு நிலைமைக்கும், பொருள் என்ன? நோக்கம் யாது? பயன் என்ன? என்று கழகத்தோழர்கள் மட்டுமல்ல, பொதுமக்களே, கவனிக்க, கணக்கெடுக்க, காரணம் காண விழைகின்றனர்.

கழகத்திலே ஏற்படக்கூடிய மாற்றங்கள், திருப்பங்கள், திருத்தங்கள், ஆகியவை, கழகத்தை மட்டுமல்ல, நாட்டின் நிலைமைகளையே, பாதிக்கத்தக்கவை என்ற கட்டம் ஏற்பட்டுவிட்டது.

கழகத்தார், கழகத்துக்கு மட்டுமல்ல, நாட்டுமக்களுக்கே பொறுப்பானவர்கள் என்ற உயர்நிலை அடைந்துவிட்டிருக்கிறோம்.

கழகத்தின் வாழ்வும், வளர்ச்சியும், பயனும், தன்மையும், கழகத்தவர் பார்த்துச் செய்திடவேண்டிய, தனித்துறைக் காரியம் என்ற நிலைமைமாறிப் பொதுமக்கள்—நாட்டு நலனில் அக்கரைகொண்டோர், தொடர்பு கொண்டு, சமைத்தளிக்கும் பொறுப்பை மேற்கொள்ளவேண்டிய நிலைமை மலர்ந்து வருகிறது.

கழகம், நாட்டுக்கான நற்பணியாற்றக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை கழகத்தவர் அல்ல, நாட்டுமக்களே, நம்பிக்கையுடன், எடுத்துரைக்கும், நாட்களில் இருக்கிறோம்.

கழகம், நாட்டுக்கோர் அணிகலனாய்த் திகழ்கிறது, என்ற உணர்வு பொதுமக்களுக்கு ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

கழகம், கபடரின் ஆட்சியை, வஞ்சகரின் ஆதிக்கத்தை, வீழ்த்தத் தக்கதோர் படைக்கலம், என்ற நம்பிக்கை, நாட்டுக்குரியவர்களிடம் ஆழப்பதிந்துவிட்டது.

கழகம், விடுதலைப் போர் முரசொலி எழுப்பி, வடவராட்சி எனும் வாடையை விரட்டி மரபுகாத்திடும் மன்றமாகி, நம்நாடு பெற்றுத்திகழ, பாசறை அமைத்துத்தரவேண்டிய விலை இன்னுயிரே எனினும் ஈந்து, திராவிடநாடு பெற்றாகவேண்டுமென்று துடித்தெழுந்து போரிடும் முன்னணி என்ற பேருண்மை, நிலைநாட்டப்பட்டுவிட்டிருக்கிறது.

எனவேதான், தம்பி! இதற்கு ஒரு இடுக்கண் வருகிறது என்ற நிலை கண்டால், நாடே பேசுகிறது, நல்லோரெல்லாம் கவலையுறுகின்றனர், ஆதிக்கக்காரர் அகமகிழ்கின்றனர், பொச்சரிப்புக்காரர் ஏசித் திரிகின்றனர், பொறுப்புணர்ந்தோர் குமுறுகின்றனர்.

நிலைமை இது அல்ல எனின், ஏன் நாலாறு நாட்களாக, நாடே இந்தப் பிரச்சினைபற்றிப் பேசுகிறது; நாடாள்வோர், இதை வைத்துக்கொண்டே நையாண்டி செய்து வருகின்றனர்? எண்ணிப்பார்த்தனையா?

விளக்கில் வீழ்ந்துபடும் விட்டில் பூச்சி கண்டு, எவரும் பதறுவதில்லை! வேழத்தின் முழக்கம் கேட்டாலோ, என்ன? என்ன? ஏன், இந்த முழக்கம்? வேல் பாய்ந்த வேதனையோ? வெட்டிய படுகுழியில் வீழ்ந்துபட்டதோ? சூல்கொண்டதால் வந்துற்ற வலியோ? காரணம் யாதோ, கரி இதுபோல் குரலெழுப்ப என்று எவரும் எண்ணுவர். ஆமல்லவா?

பட்டுத் துணி, காற்றால் முட்புதர் பக்கம் அடித்துச் செல்லப்பட்டால்தான், எவரும் பதறுவர்; பறந்திடும் பட்டம் அறுபட்டால், பதறுவரோ?

அஃதேபோன்றுதான் தம்பி! நமது கழகம், மதிப்பு மிக்கது, பயன்தரவல்லது, நாட்டுக்குத் தேவைப்படுவது, நல்லோரின் ஆதரவு பெற்றது, பெரியதோர் பணியினைச் செய்து முடிக்கும் பொறுப்பினை மேற்கொண்டிருப்பது, என்பதனால்தான், அத்தகைய ஓர் அமைப்புக்கு, ஒரு அதிர்ச்சி ஏற்பட்டாலும், நாடு, நடுக்குற்றுக் கேட்கிறது, என்ன? என்ன? ஏன்? ஏன்? என்று.

நிலைமைகளைப்பற்றிக் கவலையற்று இருந்துவிட்டேன் என்று கூறவில்லை, தம்பி! அந்தக் கவலைக்கு இடையிலேயும், எனக்கு இந்தப் பேருண்மை விளங்கிற்று; கரும்பாக இனித்தது.

அது எக்கேடோ கெடட்டும், நமக்கென்ன? நாம் நமது காரியத்தைப் பார்ப்போம் என்று, பொதுமக்கள், இருந்துவிடவில்லை. இது இப்படியானால், நமது எதிர்காலம் என்ன ஆகும் என்ற கவலையைத் தெரிவித்தனர்.

கழகம், கட்டுக்கோப்புக் குலையாமல், வலிவும் பொலிவும் பெற்று, வளரவேண்டும்; அதன் மூலமாக நமது நலிவுகள் போக்கப்பட வேண்டும், என்று நாட்டு மக்கள் எண்ணுகின்றனர்; நம்புகின்றனர்; எனவேதான், கழகத்துக்கு ஏதேனும் ஊறு நேரிடுமோ என்ற

ஜயப்பாடு ஏற்படினும், பதறுகின்றனர், பேசுகின்றனர்.

உத்தரப் பிரதேசக் காங்கிரசில் அமளி இருப்பதால், ஆந்திரப் பிரதேசக் காங்கிரசில் கலாம் விளைவதால், காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் கெட்டுவிடக்கூடும், என்பது மக்களுக்குத் தெரியத்தான் செய்கிறது; எனினும், அதுபற்றி அவர்கள் அக்கரை காட்டுவதில்லை. ஆயாசப்படுவதில்லை. ஏன்? அந்தக் கட்சி வலிவுடன் இருப்பதும், வலிவு இழப்பதும், அதைப் புகலிடமாக்கிக் கொண்ட பெரிய புள்ளிகள் கவனித்துக் கவலைப்பட வேண்டிய விஷயம்; பொதுமக்கள் அதனைப்பற்றிக் கவலைப்படத்தக்கவிதமாகக், காங்கிரஸ் கட்சி, பொது மக்களுடையது என்று கூறத்தக்க நிலைமை இல்லை.

கழகம், அப்படி அல்ல! பொதுமக்களின் பேரன்பைப் பெற்றுத் திகழ்கிறது; பொதுமக்கள், கழகத்தின் பணியினை எதிர்பார்க்கின்றனர்; நிரம்ப.

அதுபோலவே, விவரமறியா மக்களை, வெள்ளை உள்ளத்தினரை, மயக்கியும் மிரட்டியும், வசப்படுத்திக் கொண்டுவிட்டோம், இனி என்றென்றும், இவர்கள் நமது பிடியில்தான் இருப்பர், விடுபடவேண்டுமென்ற வேட்கையே எழாது, எழினும் வழி அறியார்!—என்று காங்கிரஸ் எதேச்சாதிகாரம், நம்பிக் கிடந்தது. தன்னை எதிர்த்தவர்களைத் தாக்கித் தகர்த்துத் தகர்த்துத் தருக்குடன் இருக்கிறது. இரத்தம் தோய்ந்த வாயுடன், உறுமிக்கொண்டிருக்கும், புலியென்ருகிவிட்டது. இந்நிலையில், தம்பி! பன்னிரண்டு ஆண்டுகளில், நமது கழகம், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்துக்கு, ஒரு 'அறை கூவல்' ஆகி நிற்கிறது.

அத்தனை பெரிய, எதேச்சாதிகாரத்தை எதிர்க்கத்தக்க வலிவினைப் பெறுவதற்குத் தேவைப்படும், சாதனங்கள், நம்மிடம் இருந்ததில்லை. நாமோ அதற்காகக் கவலைப்பட்டுக் கைகட்டி வாய்பொத்தி இருந்துவிடவில்லை. கட்கமேந்திப் போரிடுவோனைக் கவண் கற்கள் கொண்டே வீழ்த்திய தீரனைப்பற்றிய கதையொன்றுண்டு. அதுபோல, நாம், எல்லாச் சாதனங்களையும் வைத்துக்கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியை, நமது உறுதி, தன்னம்பிக்கை, ஆகியவற்றின் துணைகொண்டு எதிர்த்து நின்ருேம்; இன்று, காங்கிரசிடம் உள்ள சகல சாதனங்களும், நம்மைச் சமாளிக்கப் பயன்படுத்தித் தீரவேண்டிய நிலைமை!!

இவர் என்ன சொல்லுகிருர் கேட்போம்—என்று ஆவலுடனும் பெருமதிப்புடனும், பயபக்தியுடனும் பொது மக்கள், அருகே வந்து சேரத்தக்க, மேல் நிலையினராகவோ, மேதைகள் ஆகவோ, விருதுபெற்றவர்களாகவோ, வீரக் கழலணிந்தவர்களாகவோ கூடித், துவக்கியது அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை நாம் துவக்கிய போது, ஆற்காட்டு இராமசாமியார், தமது அறிவுத் திறனை எடுத்துக்காட்ட, ஆங்கில நாடுகளில் உலா வந்துகொண்டிருந்தார். வணிகக் கோமான்கள் பொருள் ஈட்டினர்; பிரபுக்களாயினர்! மேதைகள் நூற்கள் எழுதினர், பாராட்டுப் பெற்றனர். தேர்தல் தந்திரமறிந்தோர், கூடுவிட்டுக் கூடுபாய்ந்தனர், பதவிகளைப் பெற்று மகிழ்ந்தனர். இசைவாணர்கள், காங்கிரஸ் நாமாவளி பாடி, புகழ் தேடினர். நாடகமேடைகள், நம்மை நள்ளிரவில் நையாண்டி செய்யும், மாற்ருர் கைக்கருவிகளாக இருந்தன. படக்காட்சிகள், பரலோக விளக்கமளித்துக்கொண்டிருந்தன. புலவர்கள், நமது 'சிற்றறிவு' பற்றி எடுத்துரைத்து ஏளனம் செய்திடத் தமது பேரறிவைப் பயன்படுத்தி வந்தனர். மாணவர்கள், ஜெய்ஹிந்திலேயோ, இன்குலாப் ஜிந்தாபாத்திலேயோ, ஈடுபட்டுவிட்டிருந்தனர். தம்பி! அன்று, கொட்டும் மழையில் வெட்டவெளியில், கூடினேமே, கழகம் துவக்க, அந்த நாளையும், அதுபோது, நமக்கு இருந்த வசதிக் குறைவுகளையும், இன்று நமது கழகம் பெற்றுள்ள ஏற்றத்துடன், ஒப்பிட்டுப்பார்; உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளும்.

பத்திரிகைஉலகம், நம்மைப் பரிகாசப்பொருளாகக் கருதிற்று; நாம் கவலைப்படவுமில்லை; செயலாற்ருமலிருந்துவிடவுமில்லை; இன்று, நம்மைத் தாக்குவதாலேயே விற்பனையைப் பெருக்கிக்கொள்ளமுடியும் என்ற வித்தையைக் கையாண்டு வரும் பத்திரிகைகள் பல. நாட்டிலே, பெரிய இதழ்கள், பெயர் பெற்ற இதழ்கள் இருட்டடிப்புச் செய்தபோது என்ன செய்தோம்? நாட்டு மக்களிடம் இடைவிடாத் தொடர்புகொண்டோம்; பிறகு மக்கள், இத்துணைப் பணியாற்றும், இந்தக் கழகத்தின் செய்தியைத் துளிகூட வெளியிடாமலிருக்கும் பத்திரிகைகளும், பத்திரிகைகள்தாஞ என்று கேட்டனர், கண்டித்தனர். தம்பி! தெரியுமா, உனக்கு; இப்படி இருட்டடிப்பில் தள்ளப்பட்டிருந்த நமது கழகம், பண்டித நேருவுக்குக் கருப்புக் கொடி பிடித்ததே, அந்தச் செய்தி, நிகழ்ச்சி நடைபெற்ற 24 மணி நேரத்திற்குள், அமெரிக்க நியூயார்க் நகரில் உள்ள நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில், மிக முக்கியமான செய்தியாக வெளியிடப்பட்டது. நமது கழகத்தின் இறுதி நாள் வந்துவிட்டது என்று இறுமாப்பாளர் பேசித்திரிந்த அதுபோது டென்மார்க் நாட்டிலிருந்து ஒரு ஆராய்ச்சியாளர், நமது கழகத்தைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும்படி, எனக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

காங்கிரஸ் மேடைகளில், மாநாடுகளில், இசைவாணர்கள், கோகிலகானங்கள், கொடுமுடிகள் பாடுவர், பெருமைப்படுவர்.

நமக்கு? இயக்கத் தொண்டர்கள்—கொள்கையை இசையாக்கி, உற்சாகத்தை இராகதாளமாகக்கொண்டு பாடுவர். தம்பி! இப்போது நிலைமை என்ன தெரியுமா? இசைவாணர்கள், நமது இயக்கப்பாடல்களில் இரண்டொன்றையாவது தெரிந்துவைத்துக்கொண்டால்தான் 'கச்சேரி களைகட்டும்' என்ற நிலைமை!!

நாடகமாடிப் பெயர் பெற்றவர்கள், வேடமணியும்போது 'வெல்வெட்'—மற்ற நேரங்களில் கதர்! அதுதான் 'பாணி'!! இன்று? புதுப்புது நாடகங்கள் கேட்கிருர்கள் நடிக நண்பர்கள். நாடக மேடை என்ருலே, கழகப் பிரசாரமாகிவிட்டது, என்று நாடாள்வோரே கவலைப்படுகின்றனர்.

இவைகளை எண்ணிப் பார்க்கச் சொல்லும் காரணம், வெற்றிப் பட்டியலைக் காட்டிக் களிநடமாடவும் அல்ல; இதுபோதும் திராவிட நாடு பெற என்ற ஏமாளித்தனம் கொண்டதாலுமல்ல; இத்துணை மாறுதல், வளர்ச்சி, பொதுமக்கள் தந்த ஆதரவினுல் நமக்குக் கிடைத்தது என்பதைக் காட்ட. அதனுல்தான், நாம் ஊட்டிவளர்த்த கழகத்துக்குத் துளி ஊனமும் வரக்கூடாது என்ற கவலை, பொதுமக்களுக்கு ஏற்படுகிறது; இவ்வளவு விரைவிலே, பொதுமக்களின் நல்லாதரவைப் பெற்று, நமது ஆதிக்கத்தை அழிக்கத்தக்க ஆற்றலைப் பெற்றுவிட்ட இந்தக் கழகத்திலே, ஏதேனும் ஊனம் ஏற்படாதா, உடைபட்டுப் போகாதா, நாம் உயிர்தப்பிப் பிழைத்திட வழி கிடைக்காதா, என்ற நப்பாசை நாடாளும் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்படுகிறது. அதனுல்

தான், காங்கிரசை ஆதரிக்கும் ஏடுகள், நமது மாநாடு களை நாலே வரியில் நாட்டு மக்களுக்குக் கூறும் ஏடு கள், நமக்குள்ளே பேதம், பிளவு இருக்கிறதா என்று மோப்பம் பிடித்து அலைந்து, சிந்தியது சிதறியது, வீசியது பூசியது ஆகியவற்றைப், பக்கம் பக்கமாக வெளியிட்டு, நமது கழகத்தைப் பொதுமக்கள், கைவிட்டு விடவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வாண்டு, குடியரசு விழாக் கூட்டம் முழுவதுமே, கழகத்துக்கு அர்ச்சனை நடத்தத்தான் பயன்பட்டதாம். அமைச்சர்கூடப், போதையேறிய பூபதிபோல ஆசனத்தில் சாய்ந்தபடி கேட்டாராம், தி. மு. கழகத்தை நாங்களா அழிக்கவேண்டும்!—என்று. அது தன்னாலே அழிகிறது, ஒருவருக்கொருவர் பேதப்பட்டு அழிவைத் தேடிக்கொள்கிறார்கள் என்று பொருளாம்!! உத்தரப் பிரதேசத்துப் பிளவை நீக்க ஓடோடி வருகிறார் நேரு! ஆந்திர அமளியைத் தீர்த்துவைக்க வரிந்து கட்டிக் கொண்டு வருகிறார். அந்தவிதமான பிளவுகளால், காங்கிரஸ் அழிந்துவிடாதாம்; நமக்குள்ளே, முறைகளைப்பற்றிய கருத்துரைகள் கூறப்படுவதிலே, கசப்புகள் ஏற்பட்டால் போதுமாம், நாம் உடைபட, அழிந்து விட!! அளவற்ற புல்லறிவும் துணிவும் வேண்டும், இப்படி பொரு வாதம் புரிய!

நான் அங்ஙனம் கூறுவதால், நமக்குள் கருத்து வேற்றுமைகளால் பேதம் தலைதூக்கி நிற்கவேண்டும் என்று கூறுவதாகக் கொள்ளற்க. நமக்குள் ஏற்பட்டுள்ள வேற்றுமைகள், கழகத்தை நடத்திச் செல்லும் முறைகள் பற்றி—கழகக் கொள்கை பற்றியது அல்ல.

ஆனால், இதற்கே இத்துணை இரைச்சல் கிளப்புகின்றனர், இடுப்பொடிக்க முயலுகின்றனர், ஏளனம் செய்கின்றனர், காங்கிரசார். பொதுமக்களும், இந்த அளவிலும் வகையிலும்கூட, நமது கழகத்தில் பேத உணர்ச்சி காணப்படுவதை விரும்பவில்லை; கலக்கமடைகிறார்கள். பெற்ற குழந்தைக்கு வந்துற்றது நோய்கூட அல்ல; பால் மணம் மாறாக் குழந்தை படுத்துறங்குகையில் சிற்றெறும்பு கடித்ததனால், ஏற்பட்ட சிறு தழும்பு என்றாலும், தாய் பதறுவதைக் காண்கிறோமல்லவா; அஃதேபோல, நாம் வளர்த்திடும் கழகத்திலே முறைபற்றிக்கூடத்தான் பேத உணர்ச்சி மூண்டிடுவது ஏன்; மூண்டிட்டதும் இந்த வடிவம் பெறுவானேன் என்ற கவலை, நல்லோருக்கெல்லாம் ஏற்படுகிறது.

மாற்றார்களுக்கு நாமே இரைதேடிக் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுவிடாதபடி, பார்த்துக்கொள்ளும் பொறுப்பு, தம்பி! நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஆனால், மாற்றார்களுக்கு இடம் கிடைத்துவிடுமே என்ற அச்சத்தால், உள்ளத்தில் எழும் கருத்தை அழித்துக்கொள்ளவேண்டும் என்று கூறமாட்டேன். அதனை எடுத்துரைக்கும் முறையும் தன்மையும், எடுத்துரைக்கும்போது, நாம் கூடி ஆராய்ந்து முடிவெடுப்பதிலே மேற்கொள்ளும் பொறுப்புணர்ச்சியும் பண்பும், வளர்ந்தாகவேண்டும். கழகம் வளர வளரப் புதிய புதிய பிரச்சினைகளை நாம் சந்தித்துத் தீரவேண்டும். அது தவிர்க்கமுடியாத கடமை. அந்தக் கடமையைச் செய்வதிலே, அச்சம் தயை தாட்சணியம் தேவையில்லை. ஆனால், தோழமை பாழ்படலாகாது—முறைக்கேடு ஏற்படக்கூடாது — கட்டுக்கோப்பு உடைபடக்கூடாது. மெத்தக் கஷ்டப்பட்டு, கட்டப்பட்டது, தம்பி! இது. இதற்கு ஒரு ஊனம் ஏற்படக்கூடாது.

இப்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப்பற்றி, தம்பி! நீ, நிறைய அறிந்திருக்கிறாய். நான் கூற, புதிதாக என்ன இருக்கிறது.

ஒன்றுமட்டும், கூறுவேன், நமது தோழர்கள் பீதி அடையத்தக்கவிதமான நிலைமைக் கேடு ஏதுவும் ஏற்பட்டுவிடவில்லை. மாற்றார்களுக்கு இதனைச் சொல்வேன், வேழம் வேல் பாய்ந்து வேதனைக்குரல் எழுப்புகிறது, வீழ்ந்துபடும் என்று எண்ணாதீர். வேழம், சந்தனமரத்தின்மீது உராய்ந்துகொள்ளுமாம் — புலவர் கூறுகின்றனர். ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு, அடவியில் ஓடுமாம்—முழக்கமிட்டபடி.

முறைகளைப்பற்றி இங்கு ஒருவருக்கொருவர் விவாதம் எழுப்பும் குரல் கேட்டு, கழகம் அழிந்துபடும் என்று எண்ணிக்கொள்ளாதீர்.

முறைபற்றிக் கருத்துவேற்றுமை எழுகிறது என்றால், உமது எதேச்சாதிகாரத்தை அழித்தொழிக்க, எம் முறை சிறந்தது, விரைவில் வெற்றி தரத்தக்கது என்பது பற்றித்தான்.

தம்பி! மாற்றாரின் மனம் களிப்பது எனக்குத் தெரியும்; என்னைவிட மிக நன்றாக, நீ அறிந்திருக்கிறாய்.

மாற்றுக் கட்சியினரோ, செயற்குழுவில் அமளி — அடிதடி, நடிக நண்பர்கள் தாக்குதல் நடத்தினர், சட்டையைப் பிடித்து இழுத்தனர் என்ற பொய்யுரையைப் பரப்பி, நமது கழகத்துக்கு இழுக்கு தேடவும், நமக்குள் கலாம் மூட்டவும் முயற்சிக்கின்றனர். அவர்கள் சித்தரித்து இருப்பது கண்டு கலங்கிப்போயிருக்கக்கூடியவர்களுக்கு நான் இதனைக் கூறுவேன், அவர்கள் கூறியுள்ளபடியான அடிதடி, தாக்குதல் துளியும் செயற்குழுவிலோ பொதுக் குழுவிலோ நடைபெறவில்லை. உரத்த குரலில் பேச்சும், ஒருவருக்கொருவர் அறைகூவல் விடுவதும், அமைதியற்று எழுவதும் ஆகிய பரபரப்புக் கிளம்பி எம்மைக் கலங்க வைத்தது. அந்தப் பரபரப்பு ஒலிகேட்டு, பக்கத்திலே வேறோர் கூடத்திலே தங்கியிருந்த பொதுக்குழு உறுப்பினர்களாக உள்ள நடிக நண்பர்கள், பதறி ஓடோடி வந்தனர் — அமைதி இரண்டு நிமிடங்களில் ஏற்பட்டது—அவர்கள் திரும்பவும் தமதிடம் சென்றனர். வேறு எந்த விபரீதமும் நிகழவில்லை.

மங்கிப்போய்விட்டதாலே மறைந்தேபோய்விட்டதோ என்று பலரும் எண்ணி, இனி என்றென்றும் சென்றது மீளாது எனச் செப்பினர்—எனினும் அந்தத் திராவிட இன உணர்ச்சியை நமது கழகம், கொழுந்துவிட்டெரியும் நிலைக்குக் கொண்டுவந்து வைத்திருக்கிறது. பட்டுப்போன நிலையிலிருந்த மரம், துளிர்விடுகிறது! படர்ந்துபோக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடுகிறது! பட்டிதொட்டிகளெல்லாம் பாசறைகளாகிவிட்டன. கழகம் அழைத்தால் களம்புகத் தயாராக நிற்கின்றன, அணிவகுப்புகள். கொட்டப்பட்ட குருதி கொஞ்சமல்ல. வெட்டிச் சாய்க்கப்பட்டனர் பலர். வெஞ்சிறையில் உழன்றனர் பலப்பலர்.

இறந்துபட்டவர்கள் சென்ற வழி செல்லாதவரையில், நாம் இயக்கத்துக்குத் தரவேண்டிய காணிக்கையைத் தந்தவர் ஆகமாட்டோம் என்று உறுதிபூண்டவர்கள், நம் உடன் இருப்போர்; பலரால் இதை எடுத்துக் கூறக் கூடத் தெரியாமல் இருக்கலாம்; சிலர் இது பற்றிப் பேசுவது முறைக்கேடு, நேரக்கேடு என்றுகூட எண்ணிப் பேசாது இருந்திடக்கூடும். ஆனால், அழைப்பு வந்திடும்போது, ஆமையாகிவிடமாட்டார்கள், களம் புகாது ஏமாற்றிவிடமாட்டார்கள், உயிரைத் தந்திடத் தயங்கமாட்டார்கள்,

அவ்விதமான வீர உணர்ச்சி கொப்பளிக்கும் நிலைமையினை நமது கழகம், மிகமிகக் குறுகிய கால அளவிலே செய்து தந்துள்ளது.

கழகம் நடாத்திய பிரசாரத்தின் பயனாக, இன்று, வடநாடு தென்னாடு எனும் பிரச்சினை குறித்துப் பேசாதார் இல்லை என்ற கட்டம் காண்கிறோம்.

கிளர்ச்சிகளில் ஈடுபடத் துடித்து நிற்கும் தூயவர் ஆயிரம் ஆயிரம். அஃதேபோல், தோழமை உணர்ச்சியுடன், கழகப் பணியாற்றப் பல்லாயிரவர் உளர். பாங்கான வளர்ச்சி தம்பி! பார்ப்போர் பரவசப்படுகின்றனர், மாற்றார் வியப்படைகின்றனர், எப்படி இவர்களால் இத்துணை விரைவில் ஏற்றமிகு அமைப்பைச் சமைத்து நடாத்திச்செல்ல முடிகின்றது என்று. அத்தகைய ஓர் அமைப்பு, உடைபடுமானால், எண்ணும்போதே, நெஞ்சிலே நெருப்புப் பிடிக்கிறது, உலகம் நம்மை மன்னிக்காது. ஆமாம், தம்பி! இவர்களை நம்பி, வழி நடந்தோம், துணை நின்றோம், தொல்லைகளைத் தாங்கிக் கொண்டோம்; ஆயின் கழகத்தை நடத்திச் செல்லும் நிலையிலிருப்போரோ, தமக்குள் மாறுபாடுகளை ஏற்படுத்திக்கொண்டு, இத்தனை ஆண்டு உழைப்பையும் உருக்குலைக்கிறார்களே, என்று எண்ணி இரத்தக்கண்ணீர் வடிப்பர். அவர்கள் மனம் உடைபடும்; உடைபடின், இனி என்றென்றும், நம்போன்ற சாமான்யர்கள், ஒரு இயக்கத்தை, அமைப்பைச் சமைத்திட இயலாது; மக்கள் ஆதரவுகிட்டாது. இந்த மாபெரும் உண்மையை உணர்ந்தால், நம்மில் எவரும், கருத்துவேற்றுமைகளை, கோபதாபவேகத்துடன் கலந்து உலவவிட்டுத் தம்மையும் அறியாமல், கழகத்துக்கு ஊறுதேடிடார். உடைபட்டுப் போனபின் உட்கார்ந்து, அழுது பயனில்லை; உண்மை நிலைமையினை உணராததும் மாபெரும் தீதுக்கு வழி கோலிவிடும்.

ஒரு அமைப்பினைக் கட்டுங்காலை உள்ள கஷ்டத்தைவிட, அதனைக் காத்திடும்போது ஏற்படும் கஷ்டம் மிக அதிகம். அமைப்புக்கு அதிர்ச்சி ஏற்படுத்துவது, அதனை அழித்திடத்தக்க ஆபத்தினைகூட உண்டாக்கிவிடக்கூடும். தூசுபோகக் கண்ணாடிப் பலகையினைத் துடைத்திடத்தான்வேண்டும்; ஆனால், பக்குவமாக. எங்கெங்கு அழுக்கேறிவிட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதனை நீக்கிடத்தக்கவிதத்தில், துடைத்திடவேண்டும்—ஆர்வத்துடன். ஆனால் ஆர்வத்துடன் பக்குவமும் சேர்ந்திடவேண்டும்—இல்லையேல், துடைக்கும்போதே, கண்ணாடி பாளம் பாளமாகக் கீழே வீழ்ந்துவிடும் — பாழ்பட்டுப்போகும் — பட்டபாடு அத்துணையும் பாழாகிப்போகும்.


தம்பி! இந்தக் கவலைதான் என்மனதைக் குடைகிறதேயன்றி, எந்தப் புதிய முறைகள் புகுத்துவதற்கான முயற்சிகள்பற்றியும் நான், கவலைகொள்ளவில்லை. முறைகள், புதியனவோ, பழையனவோ, எவை எனினும், அவை ஒரு அமைப்புக்காக—எனவே, அமைப்பு அழிந்துபடாதபடி, கேலிக்கு ஆளாகாதபடி, மாற்றாரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காகாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். நேர்த்தியான அறுவைத்திறன் காட்டினர் மருத்துவர்; ஆனால், நோயாளிதான் செத்துவிட்டார் என்று கூறிடத்தக்கநிலை ஏற்படக்கூடாதல்லவா? வேலின் கூர் பார்க்க, நம் விழியினையே குத்திக் கொள்ளப்போமோ!!!


உன் கருத்து இவ்வழிதான் இருக்கும் என்பதை நான் நன்கு அறிவேன். உன் கைவண்ணத்தால் கிடைத்தது, கழகம் எனும் இந்த அமைப்பு. இன்று அது கலகலத்துப் போகாதிருக்கும் பொறுப்பினையும் நீ, மேற்கொண்டாகவேண்டும். நிலைமை இது, கூறிடுவது என் கடமை. என் முயற்சியில் குறையிராது—என் நெஞ்சில் உள்ள வலிவு போதுமானதுதான் என்ற உணர்வு குறைந்து வருகிறது. உடனிருந்து பணியாற்றிக், கழகத்தைக் கட்டிக் காத்து, வெற்றியைத் தேடிக் கொடுத்திடவேண்டும். மிக நல்ல அமைப்பு—கடினமான உழைப்பின் விளைவு—தோழமைக்கு ஓர் எடுத்துக்காட்டு—தி. மு. கழகம்.

இன்றோ. மாற்றார் எள்ளி நகையாடுகின்றனர்—உற்றார் உள்ளம் குமுறுகின்றனர்—உடைபட்டுப்போய் விடும் என்று மிரட்டுகின்றனர், நமை அழித்தொழித்துத் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொள்ள முயற்சிக்கும், காங்கிரசார். என் அச்சத்தையும், ஆயாசத்தையும், ஐயப்பாட்டினையும் நீக்கிடத் தக்கவிதத்தில், கருத்து வேறுபாடுகள்பற்றிப் பேசுவோர்கூடக், கழகம் உடைபட விடமாட்டோம், அழிவு வந்திடாது என்று உறுதி அளிக்கின்றனர்; மகிழ்ச்சி. கழகத்தில் தொடர்புள்ள எவருக்கும், நிச்சயமாக, கழகத்துக்கு இழுக்கு வந்துவிடும், அழிவு ஏற்பட்டுவிடும் என்று தோன்றுமானால், நெஞ்சு துடிக்காமலிராது; ஏனெனில், அவரெலாம் அளித்த அருந்திறனும் அயரா உழைப்பும் சேர்ந்து உருவாக்கப்பட்டதுதான், கழகம். அதற்கொரு ஊனம் ஏற்பட, எவரும் இடமளிக்கமாட்டார்கள். அந்த நம்பிக்கையும் எனக்கு உண்டு. உன் உழைப்பும், திறனும்தான், அந்த நம்பிக்கை நான் கொள்வதற்குக் காரணம். தம்பி! உன் கண்ணொளி போதும், என் கவலையை ஓட்ட, காரிருளை விரட்ட; உன் நெஞ்சு உரம் போதும் என் நடுக்கத்தை நீக்க! கழகம் காப்பாற்றப்படும் என்று, என்போன்றோர் புது உறுதி பெறுவதே, நீ எழுப்பும் எழுச்சி முழக்கம் கேட்டுத்தானே!

உன் சொல்லும் செயலும், மாற்றாருக்கு, நமது கழகத்தின் மாண்பு துளியும் மங்கவில்லை என்பதனை எடுத்துக்காட்டுவதாக அமையவேண்டும். உன் போக்கும் நோக்கும், பேச்சும் செயலும், கழகத்தை நடத்திச் செல்பவன் என்ற பொறுப்பினைச் சுமந்துகொண்டிருக்கும் என்போன்றாருக்கும், நல்வழி காட்டத்தக்கதாக அமையட்டும். எந்த ஒரு கட்சியும், அதன் மேல்மட்டத்திலே அமர்த்தப்பட்டிருப்பவர்களின் இயல்பு, திறமை, உழைப்பு இவைகளை மட்டுமே பொறுத்து இல்லை. அவர்களை அமர்த்தும் உரிமையும் ஆற்றலும் பெற்றுள்ள பல இலட்சம் உறுப்பினர்களின் திறமை, தன்மை ஆகியவற்றைப் பொறுத்து இருக்கிறது. கலசத்தின் மினுமினுப்பு, காலக்கரம் பட்டுப்பட்டு, மங்கிப்போகக் கூடும்; நட்டமில்லை அடித்தளம், வலிவுடன் இருந்தால் தம்பி! அடித்தளத்தை ஆக்கிக் காத்திடும் பொறுப்பு உன்னுடையது. அதற்கேற்ற ஆற்றலும் உனக்கு நிரம்ப இருக்கிறது. அந்த நம்பிக்கைதான், இயக்கத்துக்கு உயிர் ஊட்டம் தருகிறது. உன் பணியின் மே... பாடுதான் நாட்டின் பிணிபோக்கும், மாமருந்து. அ... அளித்து, என்போன்றாரை நடத்திச்செல்லும் ஆற்ற... படைத்தோனே! அஞ்சாது பணியாற்று! அயரா... பணியாற்று! வெற்றிக்கான பாதை வெகு தெளிவாக தெரிகிறது.

அண்ணன்,





# தொடு வானம்!

புகலவன் தன் வேலைக் காலம் முடிந்ததை எண்ணி, மலைவாயில் விழுந்துகொண்டிருந்தான்.

குருதி குடித்த புலியின் நாக்குப் போல், அந்திவானம் செந்நிறம் பெற்று உலகுக்கு இரவின் பயங்கரத்தை முன்னறிவிப்புக் கொடுத்துக்கொண்டிருந்தது. அந்த முன்னறிவிப்பைஉணர்ந்ததர்லோ என்னவோ, நிலவு தயங்கித் தயங்கி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது.

அந்த அழகுக் கலையை நுகர்ந்தபடி உட்கார்ந்திருந்தனர் குணுவும், சுந்தரமும் ஆற்றுப் படுகையில்.

"சுந்தரம்! உலகம் ஒரு இயந்திரம். மனிதர்கள் அந்த இயந்திரத்தின் இயக்கத்தைத்தான் தொடரவேண்டியுள்ளதேயன்றி, மனிதனின் இச்சைக்கும், எண்ணங்களுக்கும், அந்த இயந்திரத்தை மாற்றமுடிவதில்லை!

மாற்ற முயன்ற வழிகளில் வெற்றி பெற்றவர்கள் ஓர் சிலர்தான்...... அதுவும் ஓரளவுதான்..... அவர்களிலும், மன உறுதி படைத்தவர்கள் சிலர், பணம் படைத்தவர்கள் பலர் .. ... !"

"குணு! நிறுத்தடா! என்ன வேதாந்த விசாரத்தில் இறங்கிவிட்டாய்? உலகம் எப்படியாஞல் என்ன ....?

"அந்திவானத்து அழகுக் கலையைத்தான் நுகர்கிருய் என எண்ணிஞல், அவ்வழகைச் சுமக்கும் இவ்வுலகத்தையே வெறுத்துப் பிதற்றுகிருயே."

"சுந்தரம்! உலகம் உன் கண்களுக்கு அழகுப் பூங்காவாகக் காட்சியளிக்கிறது! ஆஞல்,அப்பூங்காவில் ரோஜாவும், முல்லையும் மட்டும் பூப்பதில்லை!

அரளியும் கூடத்தான்! மாஞும், மயிலும் மட்டும் அங்கு விளையாடுவதில்லை! நாகமும்! நீ உலகத்துடன் விளையாடுவதாக எண்ணிக்கொண்டிருக்கிருய்! ஆஞல், நீஅறியமாட்டாய் நீ வாழும் உலகம், உன்னை வாழவைக்கும் சமுகம் எவ்வளவு பயங்கர மிருகங்களை வாழவைக்கும் காடு என்று. நீ அக்காட்டில் வேட்டையாடும் வீரன் என்று எண்ணுகிருய்! ஆஞல் நீ அறியமாட்டாய் உன் திறமை இச்சூழ்ச்சிச் சமுதாயத்தில் எவ்வளவு தூரம் பயன்படும் என்று..... நீ தொடுக்கும் அம்பு அந்தப் பயங்கர மிருகங்கங்களைத்தான் கொல்லுமோ? அன்றி குறிதவறிப் போமோ! அந்த மிருகங்களுக்கு நீயே இரையாகிவிடுவாயோ! கூறுவதற்கில்லை!"

"குணு! இன்று ஏனே நீ மிகுந்த மனச்சுமையுடன் பேசுகிருய்!விடயத்தைக் கூறு ... ஓரளவு மன அமைதி பெறலாம் நீ.....! நானும் உன் உலகத்தைப்பற்றிப் புரிந்துகொள்ள முடிகிறதா என்று பார்க்கிறேன்."

"சுந்தரம்! நான் கூறப்போவது என் வாழ்க்கையில் கண்டு உணர்ந்த அனுபவமல்ல! ஆஞல், என் வாழ்க்

[ முரளி ]

கைப் பயணத்தில் சாதாரணமாகச் சந்தித்த ஒரு பேதையின் ..., இரங்கத்தக்கவளின் வாழ்க்கைத் தொடரோவியம்! அந்த வாழ்க்கைக் கதை இன்னும் முற்றுப்பெருமல் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. முடிவு எப்படி இருக்குமோ .....? எனக்கே புரியவில்லை ..... ஆஞல் ஒன்றுமட்டும் உறுதி! இனி அவள், வாழ்வில் வசதி பெற்ருலும், பழைய நிலை பெற்ருலும், சுய உணர்வு பெற்ருலும், அமைதி என்பது ஒரு சிறிதளவேனும் பெறமுடியாது ....!"

"நான் கூறப்போகும் பெண்ணின் வாழ்க்கையின் முதல்படியே சோகச் சித்திரம் எழுதத் தூரிகை எடுத்தது போல் ஆகியது. பெற்றெடுத்த உடனேயே அவள் தாய் மறைந்தாள்!

அரவணைத்து ஆதரிக்கத் தந்தையிருந்தார்..... வளர்த்தார்..... வளர்ந்தாள் எழிலோடு!

ஆஞல், உலகம் பழித்தது!.... 'துடைகாலி', 'பிறந்தபோதே தாயை வழியனுப்பியவள்' என்று. பிஞ்சு உள்ளம் கன்றியது.

ஆஞல், தந்தையின் அன்பு ஆறுதல் கூறியது அந்தச் செம்பஞ்சு இதயத்தாளுக்கு.

எத்துணை நாள் தந்தை துணை நிற்பார் .... இயற்கை அவர் வாழ்க்கை எல்லையின் கோட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

அதனின்றும் அவள் வாழ்க்கையின் சோகத் தொடர் கதைக்கு முதலெழுத்து எழுதப்பட்டது----அவள் தாய் மாமஞலும், அத்தையாலும்...

ஆ! மறந்துவிட்டேன். அப்பேதையை 'அல்லி' என்று அழைப்பார் ஆசையுடன் அவள் தந்தை ...

அல்லி மலருக்காவதுஇன்பம்பெறச் சந்திரன் உதவுகிருன்! சிலமணி நேரங்கள். ஆஞல் இவளுக்கு ...?

அல்லியின் பணமும் மாமன் கைக்கு மாறியது. கூடவே அவள் நிலையும் மாறியது--மாமன் வீட்டு வேலைக்காரி என்று.

துன்பச் சூழல் அவள் உள்ளக் கிடக்கைக்கு அணைபோட்டது.

காலம் கடுவேகமாகச் சென்றது. அல்லி அழகுப் பதுமையாக, அன்றலர்ந்த அல்லி மலராஞள்!

மாமன் மகன் 'மருதன்' அவளுக்கு ஆறுதல் கூறிஞன். அவள் அழகுக்கு இலக்கணம் வகுத்தான். அந்த இலக்கணம் "காதல்" எனும்காவியத்தைத் தோற்றுவித்தது. அதைத் தினம் தினம் பயின்று இருவரும் புலவராஞர்கள்.

"அல்லி! நீ ஒரு அஞதை...,.! உனக்கு மருதன்மேல் காதல் ஒவ்வாது!" என்றது அவள் மனச்சாட்சி.

"ஏன் ஒவ்வாது? நான் ஏன் அஞதையாகிறேன்? மருதன் உயிருடன் உள்ளளவும் நான் அஞதை

யல்ல! மருதன் யார்?என்முறையுடையோனல்லவா!" என்று அவளே தனக்கு ஆறுதல்கூறிக்கொண்டாள்.

எத்தனை நாளைக்கு இப்படி இலை மறை காயாக இருக்கமுடியும்......? மாமனுக்குத் தெரிந்தது, மலர் மொட்டு பல வழிகளில் பழிதீர்க்கப் பட்டாள்.

மருதன்! பாவம்! கடிவாளத்தை இன்னமும் தந்தையிடமிருந்துவாங்க முடியாத நிலையிலிருந்தான். படித்தும் பகுத்தறிவுபெறுத மயக்க நிலையிலிருந்தான்.

பேதை இவள் என் செய்வாள்?

பாவம். இடிமேல் இடி. மாமன் இவளுக்கு மிகவும் சிரமப்பட்டு ஒரு மணமகன் தேடி முடித்திருக்கிருராம். என்னிடம் கூறினர். அந்த மணமகன் சிறந்த பணக்காரராம்; பெரிய வீடாம், காராம், வேலையாட்களாம், இந்த இருபதாம் நூற்றுண்டு அரசராம் அவர்.....வருணித்தார். அவர் வயதுமட்டும் ஐம்பதுதானும்.

உள்ளம் தணலானது எனக்கு! பலன்.....?

அல்லி என்னிடம் ஓடிவந்தாள் ஆறுதல் பெற--அதைவிட-அக்காதல் வாழ்வின் வெற்றியைப் பெற வழி கேட்க.

நான் என்ன கூறுவது? அறிவுரை வழங்கினேன். வேறு வழி.....?

"அல்லி! உன்னுடைய அஞ்சாமை கண்டு மகிழ்கிறேன்! ஆனுல் மருதன்......! அவனுக்கு அவ்வளவு துணிந்த மனமில்லை. அதுவே உன் பக்கம் உள்ள பெரியபலவீனம்! நீ உன் தொடரோவியத்தின் கதாநாயகனுக அவனை எண்ணியிருக்கிருய்.

ஆனுல் அவன் எங்கே உன் வாழ்க்கையின் பயணத்திற்கு தடைகல் அமைக்கும் 'கொடியவன்' ஆகிவிடுவானே என்று அஞ்சுகிறேன்!" என்றேன்!

"அண்ணு! ஆறுதல் பெறவந்த எனக்கு அச்சமூட்டுகிறீர்களே! நான் உயிரிழக்க நேரிட்டாலும், என் இலட்சியக் கனவை நினைவாக்காமல் உயிரிழக்கமாட்டேன்! இது உறுதி!!" என்ருள்.

பிறகு நான் என்ன செய்வது....?

"தங்கையே! உன் வாழ்க்கையில் நீ வெற்றியடைய, சுதந்திரம் பெற ஒரே வழி! மருதனுக்கு உறுதியூட்டி, அவனை அழைத்துக்கொண்டு வேற்றூருக்குச்சென்று, வாழ்க்கைப் படகைக் கரைசேர்ப்பதுதான் .......வேறு எதுவும் எனக்கு சிறந்ததாகப்படவில்லை" என்றேன்.

"ஆகட்டுமண்ணு!" என்ருள்.

"ஆ! அல்லி! எனக்கு ஒரு சந்தேகம். ஏதாவது தவறுநடந்து மருதனின்மேல் பழி சுமத்தப்பட்டு, சட்டத்தின் கூட்டுக்குள் எடுத்தேகப் பட்டால்....?"

"பயம் வேண்டாம் அண்ணு! பதினெட்டு வயதைக் கடந்த நான் என் இச்சைப்படி வாழ, இச்சமுதாயம் இடம் தராவிட்டாலும், சட்டம் இடமளிக்கிறது!" என்ருள்.

வாயடைத்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன், அவள் விடை பெற்று சென்றதுகூட எனக்குத் தெரியாது.

"பாவம்! பிறப்பில் அனுதையாகி விட்ட அவள், வாழ்க்கை முழுவதுமே அலைக்கழிக்கப்படவேண்டிய சூழ்நிலையை இச் சமுதாயமும், சுற்றத்தாரும் அவளுக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர்.

வானத்தை தொடநினைத்துப் பறக்கும் சிட்டு ஆனுள்!

எதிர்காலம் அவளுக்கு வழிகாட்டும் என எண்ணினுள்! துணிந்து அவ்வழி நடக்கவும் நினைத்தாள்! ஆனுல், அவ்வழி அவளுக்கு என்று தான் தோன்றுமோ....? அல்லது அவள் வாழ்க்கையின் முடிவைத் தான் நாடுமோ....?

இரண்டு நாட்கள் ஆயத்தத்திற்கு பிறகு, ஒரு இரவிலே அவர்கள் இருவரையும், சென்னை செல்லும் புகை வண்டியில் யாருமறியவண்ணம் ஏற்றிவிட்டு, விடைபெற்றேன்.

இவ்வளவு விரைவில் எப்படித் தான் அவன் மனதை மாற்றினுளோ! எனக்கு ஒரே வியப்பு.......!

இலட்சியப் பாதையை நோக்கிச் செல்லும் அவ்விளம் புருக்களை என் மனம் வாழ்த்திக்கொண்டே விடையளித்தது.

ஆனுல்! சுந்தர்!! இந்தப் பயங்கர முடிவு அவர்களுக்கு உடனே ஏற்படும் என்று நான் கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை . . . . . !"

"என்ன? என்ன நடந்தது?"--அலறினுன் சுந்தரம்.

"காலைப் பத்திரிக்கை அவர்கள் சென்ற புகை வண்டி தடம் புரண்டு பெரும் பயங்கர விபத்துக்குள்ளாகியது என்பதைத் தாங்கிவந்து என் காலடியில் வீழ்ந்தது.

நான் மின் விசையால் தாக்கப்பட்டவன்போல் நீண்ட நேரம் செயலிழந்து அமர்ந்துவிட்டேன்.

சமுதாயத்தை எதிர்த்து நின்று புதிய பாதை சமைக்க முயன்ற அவ்விளம்புருக்கள் அம்பெய்யப்பட்டார்கள், இயற்கையெனும் வேடனுல்.

பாவம்! பரிதாபத்திற்குரியவள்!! சமுதாயம் எனும் மலையுச்சியில் காதல் வாழ்க்கை எனும் கொடி ஏற்றச் சென்ற அவள், அடிசறுக்கி அதல பாதாளத்தில் விழ நேர்ந்ததை எண்ணி, எண்ணி, என் மூளையே குழம்பிவிடும்போல் ஆகிவிட்டது.

நான் உடனே விபத்துக்குள்ளான இடத்திற்குச் சென்றேன். அருகிலுள்ள மருத்துவ விடுதியில் சென்று வினவினேன், இருவரைப்பற்றியும் . . . . . . !

அங்கு அந்த முருங்கைமரம், இலையுதிர்ந்து, கிளை உடைந்து, மிகவும் பரிதாபத்திற்குரிய காட்சிப் பொருளாக கிடத்தப்பட்டிருந்தது கட்டிலில்."

அந்நிலையிலும், மனம் தளராமல் அல்லியைப்பற்றி என்னிடம் உசாவினுன். அடுத்த அறையில் மயக்க முற்ற நிலையில் உயிருக்கு ஆபத்து இல்லாத சூழ்நிலையில் உள்ளதாகக் கூறினேன். ஆறுதல் பெற்ருன் . . .! ஆவியும் விற்ருன் . . . . அவளுக்காக! முருங்கை மரம், மயான அமைதியுடன் வேரற்று, விழுந்தது தரையில்.

அந்தத் தியாக மருதனின் முடிவு அவள் மனதுக்கு பெரிய அதிர்ச்சி அளித்தது. அந்த ஏமாற்றம் அவள் மூளைக்கே ஒரு மாற்றமளித்தது.

சமுதாயத்தை எதிர்த்து வெற்றி எக்களிப்புக் கொள்ள எண்ணிய அவளைப் பார்த்து சமூகம் கேலி எக்களிப்புப் புரிந்தது-பைத்தியம்! பைத்தியம்!! என்று.

பாவம்! பேதை அல்லி, பேரழகி அல்லி, பைத்தியமானுள்.

அதோ! சுந்தரம்!! அந்தப் புகை வண்டித் தொடர் தண்டவாளத்தை ஒட்டி ஓடுகிருளே -- காரிருளையும் பொருட்படுத்தாது! பேதை! வாழ்க்கையை ஒரு இன்பச் சோலையாக்கி மகிழ எண்ணி, சமுதாயம் எனும் கள்ளிப் புதரருகே விளையாடினுள். ஆனுல், அங்கிருந்த சமுதாய சனுதன சர்ப்பம் அவள் அழகு மேனிக்கு நீல நிறம் தீட்டியது.

அதோ பார்! தொடுவானமாம் மருதனைத் தேடி ஓடும் அவள் அனுதை எங்கே அடையப் போகிருள்? சாவு ஒன்றுதான் அவள் வாழ்க்கையின் இன்ப எல்லை இனி!!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

அனுப்பப்பட்டான். இரண்டொரு நாள் அவனுக்கு நல்லுணவு கிட்டியது. பிறகு கூழ்தான்; என்றென்றும் புளித்த கூழ்தான்.

பொன்னன் வளர்ந்தான். அந்த வளர்ச்சி உடல் வளர்ச்சியே. மனம், அவன் எருமை மேய்க்கத் தொடங்கினனே, அன்றிருந்த நிலையிலேயே இருந்தது. அது வளரவில்லை. வளர்வதற்கான சூழ்நிலை அவன்பால் எட்டவில்லை. ஆயினும் கடுமையாக உழைக்கும் ஆற்றலைப் பெற்ருன் அவன். அந்த ஆற்றல் அவனுக்கு அலுவல் உயர்வை வாங்கித்தந்தது. எருமை மேய்க்கும் வேலைபோய், கனமான சுமைகள் தூக்குவது, காலைமுதல் மாலைவரை தோட்டத்திலே, கழனியிலே மண்வெட்டியும் வேறு வேறு உழைப்புப் படைகளும் பிடித்து, ஓய்வு, ஒழிவு இன்றி, அவற்றைப்பற்றிய எண்ணமும் இன்றி உழைப்பது, ஆகிய வேலைகள் அவனேடு ஒட்டிக்கொண்டன. கூழும், கஞ்சியும் — பாழும் வயிற்றுக்குக் கூலியாகக் கிடைத்தன.

அவ்வாறு அவன் உழைக்கும் போது அவனேடு ஒன்ருக நின்று உழைக்க வந்த பாட்டாளிகளில் சின்னனும் ஒருவன்.

"இங்கே கூலியாகக் கூழும், கஞ்சியும்தான் தருகிருர்கள். எனக்கு இங்கிருந்து உழைக்கப் பிடிக்கவில்லை. நான் வேறு இடம் பார்க்கப் போகிறேன்'' என்ருன் சின்னன் ஒரு நாள்.

"அந்த வேறு இடம் எங்கே? கூழையும், கஞ்சியையும் தவிர, அங்கு வேறு என்ன தருவார்கள்?'' என்று பொன்னன் தன் கைவேலையைப் போட்டுவிட்டு, நிமிர்ந்து நின்று கேட்டான்.

"வேறு என்ன தருவார்களா? நீ ஒன்றுமே அறியாதவனுக இருக்கின்ருயே! எனக்குத் தெரிந்த ஓரிடம் இருக்கிறது. அங்கே கூழோடும், கஞ்சியோடும் ஆண்டுக்கு ஒரு முறை காசும் தருகிருர்களாம்!''

"காசு? அது நமக்கு எதற்கு!''

"அட முட்டாள், காசு எதற்கு என்று பைத்தியம் கூடக் கேட்காதே!''

"என்னவோ அப்பா, நீ சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லை.''

பொன்னனுக்கு உண்மையில் ஒன்றுமே புரியவில்லை. எதையும் புரிந்துகொள்ளவேண்டும், எதைப் பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும், உணர்ந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணம் என்றுமே அவன் உள்ளத்தில் எழுந்தது இல்லை. அவன் வாழ்ந்திருந்த சூழ்நிலை, பயின்றுவந்த பழக்கம் அவ்வாறு அவனை அடைத்துப்போட்டிருந்தன. பெருநிலக்கிழார், பேர்பெற்ற செல்வர் பேராசைநாதன், தாம் அருமையாக வாங்கிவந்த உழைக்கும் விலங்கொன்றுக்குக் கொடுக்கவேண்டிய உரிமையை எல்லாம் பொன்னனுக்குக் கொடுத்திருந்தார். மிகத்தேவை என்ற முன்னிலையால் 'வாங்கிவந்த பொறியொன்றை மிகமிகப் போற்றிக் காப்பதுபோல், பொன்னனை அவர் போற்றிக் காத்துவந்தார். அந்த விலங்குக்கும், பொறிக்கும் என்ருவது, எதைப்பற்றியாது எண்ணவேண்டும் என்ற அக்கறை ஏற்படக்கூடிய தன்மை பிறப்பது உண்டா? பொன்னனின் நிலையும், இயக்கமும், சார்பும் அவ்வகை தானே!

இன்று சின்னன் பொன்னனிடம் எதையோ சொல்லிவிட்டுப் போய் விட்டான். நாள்தோறும் கூழும் கஞ்சியும்கொடுத்து, ஆண்டுக்கு ஒருமுறை காசும் கொடுக்கும் வேறு ஒரு செல்வரிடம் சின்னன் போய் விட்டான் வேலைசெய்ய.

என்றுமே எண்ணியறியாத பொன்னன் எண்ணினன். சின்னன் சொன்ன புதுமை அவன் உள்ளத்தில் ஓயாது வந்து தோன்றத் தொடங்கிற்று. 'அதையும்தான் பார்த்துவிடுவோமே!' என்று ஒரு நாள் எண்ணினன். எண்ணியவாறு செய்தான். சின்னனைத் தேடிக் கொண்டு, அவன் சேர்ந்திருக்கும் இடத்தை நாடிப் போய்விட்டான்;— பட்டியிலிருந்து தறிகெட்டுமாடுகள் ஓடிவிடுவதில்லையா, அப்படி!

சும்மா இருப்பாரா பேராசை நாதன்? பொன்னனைத் தேடிக் கொண்டுபோனர் இன்பநாதனின் வீட்டிற்கு — மாளிகைக்கு. இன்ப நாதன் எல்லாம் அறிவார். என்ருலும் ஒன்றுமே தெரியாதவர்போல நடித்தார். (இப்படி நடிக்காவிட்டால் அவர் உலகை அறிந்த முன்னேடி என்பதற்கு வேறு என்னதான் பொருள்?)

பொன்னன் அழைக்கப்பட்டான். இன்பநாதன் அவனை விசாரித்தார். மறுபடியும் பேராசைநாதனிடமே வேலைக்குப் போகுமாறு அறிவுரை கூறினர்—அவருக்குத் தெரியாதா, செய்யும் செயலிலும், செய்துவிட்ட முடிவிலும் உறுதியைத்தவிர, வேறு எதையும் எண்ணிப்பார்க்கத் தெரியாதவர்கள் பொன்னனைப்போன்ற பாட்டாளிகள் என்பது? பொன்னன் போக மறுத்தான். இன்பநாதன் பேராசைநாதனின் முகத்தைப்பார்த்தார்.

பேராசைநாதன் கனைத்துத் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு பேசினர்:

"இவன் உங்களிடமே வேலைக்கு இருக்கட்டும். அதைப்பற்றி நான் ஒன்றும் மறுப்புச் சொல்லவில்லை.

HOMELAND

ஆங்கில இதழ் 19–2–61 முதல் காஞ்சிபுரத்தில் இருந்து வெளியிட ஏற்பாடாகி இருக்கிறது. விற்பனையாளர்கள் தொடர்பு கொண்டு, இதழ் எண்ணிக்கை விபரத்தை தெரியப்படுத்தவும்.

பொறுப்பாளர்,
"ஹோம்லண்ட்"
86, திருக்கச்சிநம்பி தெரு, — காஞ்சிபுரம்.

ஆனால், இவன் எனக்குக் கடன்தர வேண்டியிருக்கின்றதே! அதை யார் தருவது?''

இன்பநாதன் உள்ளூர்க்காரர் தானே. அவருக்குத் தெரியாத எல்லா விவரங்களும்! ஆயினும், மறைந்துகிடக்கும் பழங்குப்பை யைத் தோண்டி எடுப்பதில் யாருக்கு என்ன இலாபம்?—அதுவும் தம்மை யொத்த ஒருவர், தாம் வளர்ச்சி கண்ட வழியிலே, முறையிலே, வகையிலே வளர்ச்சி பெற்றவர் கூறு கின்ற கூற்று. எனவே, எதுவுமே தெரியாதவர்போல் 'எவ்வளவுகடன்' என்று வினவினர், இவர் அவரைப் பார்த்து.

"அதிகம் ஒன்றும் இல்லை. இருநூறு ரூபாய்தான். இவன் பெற்றோர் பட்ட கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக இவன் வாங்கிய கடன். நாட்கள், நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. அதற்கு வட்டி ஒன்றும் வேண்டாம். முதல் கிடைத்தால் போதும்.''

எதிரே நெடுமரம்போல் நின்று கொண்டிருந்தான் பொன்னன். உலகத்துப் புதுமைகள் ஒவ்வொன்றையும் அவன் கண்டுகொண்டு வருகிறன் என்பதற்கு அறிகுறியாக அவன் கண்கள் அடிக்கடி அகன்று அகன்று இமைத்தன.

சற்று மௌனமாக இருந்தார் இன்பநாதன். அவர்தம் உள்ளத்தே நோட்டமிட்டார் — பொன்னனின் உழைக்கும் ஆற்றலையும், அதன் வழி அவர் பெறக்கூடிய பயனையும் பற்றி.

"சரி, இருநூறுதானே! நானே தந்துவிடுகிறேன்.'' இன்பநாதன் எழுந்தார். பேராசைநாதனும் எழுந்தார்.

தளதளவென்று செழித்துக் கொழுத்திருக்கும் காளை ஒன்றைக் குறைந்த விலைக்கு வாங்கிவிட்ட மனநிறைவோடு இரண்டு தாள்களை (நூறு ரூபாய்த் தாள்கள்) எடுத்து நீட்டினர் இன்பநாதன். கன்றுப் பருவம் தொட்டு நீண்ட நாட்கள் உழைத்து, நெடிய பயனைக் கொடுத்து, போகும்போது விலையாகப் பொருளும்—பணமும்—வாங்கித் தந்துவிட்டுச் செல்லும் காளையொன்றுக்காகப் பெற்றுக்கொண்ட விலையாக எண்ணி, அந்தத் தாள்களை கைநீட்டி வாங்கிக்கொண்டார் பேராசைநாதன்.

"ஆமாம், ஆண்டுக்கொருமுறை காசு தருவார்கள் என்றுயே, அது எனக்கும் கிடைக்குமா?'' ஒரு நாள் சின்னனைப் பார்த்துப் பொன்னன் கேட்டான் இப்படி — அதைப்பற்றி அவனுக்கே ஐயம்.

சின்னன் சிரித்தான் ஒரு ஏளனச் சிரிப்பு.

"நீதான் வரும்போதே கடன் பட்டுக்கொண்டு வந்துவிட்டாயே! உனக்கு எப்படிக் காசு கிடைக்கும்? உனக்குக் கொடுக்க வேண்டிய காசை உன் கடனில் கழித்துக் கொள்வார்கள்!''

"ஐயோ, அப்படியா? இன்னும் எத்தனை ஆண்டுகள் அப்படிக் கழித்துக்கொண்டு போவார்கள்?''

"இன்னும் எட்டு ஆண்டுகள்! — வட்டிவேறு இருக்கிறது. அதற்கு ஒரு மூன்று ஆண்டுகளாவது செல்லும்!''

இன்றுதான் பொன்னன் திகைப்பைக் கண்டான். ஏனென்றால், அவன் சிந்தனை வேலைசெய்யத் தொடங்கிவிட்டது.

"என்ன இருந்தாலும் அந்தப் பேராசைநாதனைவிட இந்த இன்பநாதன் மிகவும் நல்லவர்!'' என்றான் சின்னன்.

"எப்படி நல்லவர்? இருவர் போக்கும் வேறு வேறு வகைப்பட்டது. ஆனால், நோக்கம் ஒன்றுதான். இருவரும் நம் உழைப்பைக் கவர்ந்து கொள்ளும் செயலைத்தான் சிறப்பாகச் செய்கிருர்கள். அவர்களிடையே உள்ள வேறுபாடு என்ன தெரியுமா? பேராசைநாதன் நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பதை வெளிப்படையாகவே சொன்னர். நம் உழைப்பை நம்மிடமிருந்து கவர்ந்துகொள்வதாகச் சொல்லிக்


பிப். 25 முதல்!

அரங்கண்ணல்

வழங்கும்

# அறப்போர்

வார ஏடு :: விலை 15 காசு

ஆசிரியர்: இராம. அரங்கண்ணல்

முற்றிலும் புதிய முறையில்...
தித்திக்கும் தேன் தமிழ் நடையில்...

கதைகள் ○ கட்டுரைகள் ○ சுவைமிகு பகுதிகள்
ஏராளமான படங்கள் நிரம்பி,

இதுவன்றோ இலட்சியப் பூங்கா!
கொள்கை முழங்கிடும் கூடம்!!
என
உங்கள் பாராட்டைப் பெற

**வருகிறது; வாழ்த்துவீர்; வரவேற்பீர்.**

முதல் இதழிலேயே அரிய தொடர்கதையும் துவங்கும்.

ஏஜண்டுகள் எழுதுக:
பிரதி ஒன்றுக்கு 75 காசு முன்பணத்துடன் வரும் விற்பனை விண்ணப்பங்கள் முதலிடம்பெறும்.

நிர்வாகி: 'அறப்போர்'
6, 4-வது குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், சென்னை-24.

கொண்டே பெற்றுர். இந்த இன்ப நாதன் நமக்கு உரிமை கொடுப்ப தாக வீண் பறையறைகிருர். நம்மி டம் சொல்லாமலே நம் உழைப்பைக் கவருகின்ற வகையில் செயலாற்றிக் கொண்டிருக்கிருர்.''

"இவர்தான் நமக்குக் காசு தரு கின்ருரே!''

"காசு தருகிருர்;—பிச்சைக்காசு! நம்மிடமிருந்து நூறு பங்கு உழைப் பைப்பெற்றுக்கொண்டு, ஒரு பங்குக் காசை வீசி எறிகிருர். அது உனக் குப் பெரிதாகப் போய்விட்டது. என்ன இருந்தாலும் நாம் உரிமை போடு வாழவேண்டும்.''

"நீ என்ன சொல்கிருய்?''

சின்னுன் வியப்போடு கேட்டான். அவனுக்குப் பொன்னன் சொன்னது ஒன்றும் புரியவில்லை.

"பேராசைநாதனே,இன்பநாதனே நாம் யாரிடமும் அடிமையாக இருக் கக் கூடாது. நம்மை அவர்கள் ஒரு வகையில் இல்லாவிட்டால் பிறி தொரு வகையில் அடக்கி ஆண்டு கொண்டு இருக்கும் வரையில், நாம் உரிமை இழந்து அடிமையாகக் காலந்தள்ளும் வரையில் நம் வாழ் வில் நம்மையைக் காணமுடியாது.''

"வாழ்வு, உரிமை, அடிமை, அடக்கியாள்தல் — இவை எல்லாம் என்ன புதிய சொற்களாக இருக் கின்றன? இவற்றை எங்கிருந்து தெரிந்துகொண்டு வந்தாய்?''

"நான் எங்கிருந்தும் தெரிந்து கொள்ளவில்லை. சிந்திக்கத் தொடங் கினேன். அந்தச் சிந்தனை இந்தச் சொற்களேயும், அவற்றின் பொருளே யும் என்பால் அறிமுகம் செய்து வைத்து, விளக்கந் தந்தன.''

"எனக்கென்னவோ உன் போக் குப் பிடிக்கவில்லையப்பா! பேசாமல் இந்த இன்பநாதனிடமே உழைத்துக் கொண்டிருப்பது மேல். எப்படியோ வாழ்கிருேம். உணவு கிடைக்கிறது. உறங்க முடிகிறது. அவை போதாவா? உரிமை, அடிமை என் றெல்லாம் பேசி ஏன் மனத்தைப் போட்டுக் குழப்பிக்கொள்ளவேண் டும்?—இதோ பார், அந்தப் பேராசை நாதனிடம் வேலை செய்துகொண் டிருந்த பலபேர் இப்போது இங்கே வந்துசேர்ந்துகொண்டிருக்கிருர்கள். இந்த வேளை பார்த்து இப்படி நீ பேசு வது தகாது. இன்பநாதன் என்னிடம் என்ன சொல்லியிருக்கிருர் தெரி யுமா? எல்லாருடைய வேலைகளேயும் கண்காணிக்கும் அலுவலை எனக் குத் தரப்போகிருராம். அப்படியே இன்னொரு நாள் உன்னைப்பற்றியும் சொல்லுகிறேன் அவரிடம். உனக் கும் அப்படியொரு வேலை போட்டுத் தந்துவிடுவார். பிறகு நம் பாடு கொண்டாட்டம்தான்.''

"நம் மட்டில் நல்ல வாழ்வு வாழ்ந்துகொண்டு போவதைப்பற்றி நான் சொல்லவில்லை. அந்த நல்ல நிலையும் வாய்ப்பும் எல்லாருக்கும் கிட்டவேண்டும்.''

"எல்லாரும் மேற்பார்வையாளர் ஆகிவிட்டால் உழைப்பது யார்? எல்லாருக்கும் நல்ல நிலை எப்படிக் கிடைக்கும்?''

"சின்னுன், நீ உழைப்பதைப் பற்றிச் சொல்கிருய்! நான் உரிமை யைப்பற்றிப் பேசுகிறேன். எல்லா ரும் உழைக்கவேண்டும். ஆனல், உரிமை வாழ்வு பெற்றுக்கொண்டு உழைக்கவேண்டும்!''

"நீ சொல்வதென்னவோ எனக் குப் புரியவில்லை, பேசாமல் உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போவாயா! அதை எல்லாம் விட்டு விட்டு......''

சின்னுன் அப்பால் நகர்ந்தான். பொன்னன்மீது அவனுக்கு, எரிச் சல், எரிச்சலாக வந்தது.

பாவம், நீண்ட நெடுங்காலம் அடி மையாகக் கிடந்து, — பாட்டன் காலம் முதல் அதில் நன்ருக ஊறி, ஊறிப் பழகிப்போன முன்னிலையால், உரிமை என்ருல் என்னவென்றே சின்னுனுக்குப் புரியவில்லை. 'மற்ற வனிடம் அடிமையாக இருந்து கொண்டு, அவன் ஏவும் வேலையைச் செய்துகொண்டு வாழ்வதில் என்ன தவறு இருக்கின்றது? எப்படியா வது உணவும், உடையும், உறை யுளும் கிடைத்தாற் போதாதா?' என்ற போக்கில்தான் அவன் எண் ணம் சென்றது.

பொன்னனும், சின்னுனுடன் அடி மையாகக் கிடந்தவன்தானே! அவ னும் அறியாமைச் சேற்றில், ஆழத் தில் மூழ்கி இருந்தவன்தானே!— என்ருலும் இவனுக்கு உணர்வு வேகம் அதிகம். சின்னுனின் மந்த புத்தி காட்டிய வழியிலே நடந்து செல்லும் குருட்டுப் போக்கு இவ னிடம் இல்லை. எனவே உரிமை உணர்வு பொன்னனிடம் திக் என்று பற்றிக்கொண்டது.

சின்னுன் பொன்னனை வெறுக் கத் தொடங்கினுன். அவன் சொல் லையும், செயலையம். நடவடிக்கை யையும் ஒன்று விடாமல் இன்பநாத னிடம் அறிவித்துக்கொண்டு வந் தான். அதன் மூலம் 'நல்லபிள்ளை' என்ற பெயரை இன்பநாதனிட மிருந்து சின்னுன் எளிதில் சம் பாதித்தான்.

பொன்னனுக்கு இன்னல்மேல் இன்னல் வந்தது. அவன் தளர வில்லை. 'என்ருவது ஒரு நாள் தன் இனத்தவர்—அந்தச் சின்னுன் உட் பட—தன் சொல்லுக்குச் செவி மடுப் பார்கள். அக்கணமே உரிமை வாழ்வு கிட்டிவிடும்' என்ற உறுதி யோடு, நம்பிக்கையோடு அவன் செயல்பட்டுக்கொண்டு வந்தான்.

*

அதோ பேராசைநாதன் வந்து விட்டார். மற்றவர்கள் எல்லாரும் வந்துவிட்டனர். விருந்து மண்டபம் நிறைந்துவிட்டது. எல்லாரும் உண் ணத் தொடங்கினர். சின்னுன் அங்குமிங்கும் பரபரப்புடன் ஓடி யாடிப் பம்பரமாகச் சுழன்று, அவர் களுக்குக் கிட்டிய ஆனந்த சுதந் திரத்துக்கு இவன் ஆனந்தத் தாண் டவமிட்டபடி அவர்கள் ஏவியதை எல்லாம் செய்து கொண்டிருக் கிருன்.

திடீர் என்று நினைத்துக்கொண்ட வர்போல் இன்பநாதன் சின்னுனை அருகில் அழைக்கிருர்.

"சின்னுன், இன்று என்ன நாள்?''

"இன்று குடியரசு நாள் எச மான்!''

"அட...அப்படித்தான் சொல்ல வேண்டும். அந்தப் பொன்னனைப் போல் நீ 'மண்டு' இல்லைப்பார்! நாம் எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்று உணர்த்தும் நாள் இன்று. வா, வா! இப்படி உட்கார்! நீயும் நானும் ஒன்றுதான்! நீயும் சாப்பிடு விருந்து! இன்று நீயும், நானும் ஒன் ருக அமர்ந்து சாப்பிடவேண்டும்!''

சின்னுன் தயங்கித் தயங்கி இன்ப நாதன் அருகிற்போய் அமர்கிருன். 'இவரைப்போய் சொல்கிருனே அந் தப் பொன்னன் நம்மை அடக்கி ஆள்கிறவர் என்று!' எனத் தனக் குள் முனகிக்கொள்கிருன் அவன்.

எல்லாவற்றையும் தூண் மறை வில் நின்றபடி கண்ணீர் மல்கப் பார்த்துவிட்டு உழைக்கச் செல் கிருன் பொன்னன்.

ஐயோ, அடிமை மனப்பான் மையே! உனக்கு எப்போதுதான் உரிமை உணர்வு வருமோ!

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்... அலுவலகம் 15 / இல்லம்... 118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.




காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.